Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-15 | 30-12-2004 | வியாழக்கிழமை | ஓசை -316



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

T.P:0712-610008 (சி-10931)

## துயருற்றோருக்கு ஆறுதல், அனுதாபம்

# பாதிப்புற்ற மக்களுக்கு உதவுமாறு

# சர்வதேசத்திடம் தலைவர் பிரபா கோரிக்கை

## உதவியோருக்கும் நன்றி தெரிவிப்பு

**இயற்கையின் அழிவில் உறவுகளைப் பறிகொடுத்துள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தனது ஆறுதலையும், அனுதாபத்தையும் தெரிவித்துள்ள தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் துயருற்றுள்ள மக்களுக்குத் தாமாக முன்வந்து உதவுவோருக்கு நன்றி தெரிவித்துள்ளதோடு பாதிப்புற்ற மக்களுக்குத் தாராளமாக உதவுமாறு உலக நாடுகளிடமும் ஐ.நா. அமைப்புக்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



இது குறித்து தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு.

என் அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே.

இன்று எமது தாயகதேசம் என்றுமில்லாத பேரழிவைச் சந்தித்துப் பெரும் துயரில் மூழ்கிப்போய் நிற்கிறது. ஒரு சில நாட்களுக்கு முன்னர் எவருமே எதிர்பாராத தருணத்தில், திடீரெனச் சீறி எழுந்த நிலவதிர்வுப் பேரலைகள், தென்னாசியப் பிராந்தியத்தின் கடலோரப் பகுதிகளை மூர்க்கமாகத் தாக்கின. இலங்கைத்தீவில் , யாழ்ப்பாணத்திலிருந்து காலி வரையான கடலோரம் குறிப்பாக எமது தாயகப் பகுதிகள் இயற்கையின் கோரத் தாண்டவத்திற்கு இலக்காகிப் பாரிய உயிரழிவையும் , பொருளழிவையும் சந்தித்துள்ளன. கடல் எழுச்சியின் இந்த அனர்த்தமானது இந்த கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்த போரினால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய துக்க தினமாக நாளைய தினத்தை அனுஷ்டிக்குக!

### -யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் கோரிக்கை

தமிழீழக் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பின் காரணமாக இயற்கை அனர்த்தத்தால் விளைந்த உயிரிழப்பு உட்பட்ட பேரழிவுகளை மனதிலிருத்தும் தேசிய துக்கதினமாக நாளைய தினத்தை அனுஷ்டிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

1. அன்றைய நாளில் வீதிகளில் கறுப்புக் கொடிகளைக் கட்டுதல்.
2. துக்கதினத்தைக் குறிக்கும் வகையில் கறுப்புப்பட்டி அணிதல்.
3. முக்கிய சந்திகளில் சோக இசை ஒலிபரப்புதல்.
4. பகல்12.00 மணிக்கும், பிற்பகல் 12.10 மணிக்குமிடை அலுவலகங்கள், வீடுகள்,வணிக நிலையங்களில் பணிகளை இடை நிறுத்தி மௌனவணக்கம் செலுத்துதல்.நோயாளர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களைத் தவிர மற்றைய மிதிவண்டிகள், உந்துருளிகள் உட்பட்ட அனைத்து வாகனங்களையும் இடை நிறுத்தி, அமைதியாக மௌன வணக்கம் செலுத்துதல்.
5. பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி ஆற்றுப்படுத்தல்.

மேற்படி செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களது கரங்களை இறுகப்பற்றி இணைந்துள்ளோம் என்பதுடன் அவர்களுக்கு எதிர்கால நம்பிக்கை ஒளியூட்டுபவர்கள் ஆவோம்.

## அவலத்தைப் பயன்படுத்தி படைத்தரப்பு ஆக்கிரமிப்பு

"சுனாமி" கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறைக் கரையோரப் பகுதிகளில் இதுவரை மீனவர்களால் படகுகள் தரிப்பிடமாகப் பயன்படுத்தப்பட்ட பிரதேசங்களில் பெருமளவினைப் படைத்தரப்பு அவசர அவசரமாக ஆக்கிரமித்து வருவதாக வல்வெட்டித்துறை மீனவர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் 13000 இற்கு மேல் பலி

தென் கிழக்கின் கரையோர முஸ்லிம் தமிழ்க் கிராமங்களைச் சேர்ந்த 13261 பேர் இறந்துள்ளதாக உத்தியோக பூர்வமாகப் பதியப்பட்டுள்ளதென அம்பாறை மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.. கடந்த செவ்வாய் இரவு வரை 9000 சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இங்கு ஏற்பட்ட சேத விபரங்கள் வெளிச்சத்திற்கு வரவில்லை, ஏனெனில் சிறிலங்கா அரசினதும், சர்வதேச ஊடகங்களும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கம்

26.12.2004 அன்று யாழ்.நாகர் கோவில் பகுதியில் கடமையில் இருந்தபோது இயற்கை அனர்த்தத்தின் காரணமாக, தமிழீழத் தேசியத்துணைப்படை வீரர் ஒருவர் சாவடைந்துள்ளார். லெப்டினன்ட்-சுந்தரமூர்த்தி (முத்தையா-சுந்தரமூர்த்தி, கண்டி, தமிழ் விகவமடு (குளத்தடி, பாரதிபுரம்), என்பவரே சாவடைந்தவராவார் இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### -புதுக்காட்டுச் சந்தி செயலணிக் குழுவினரால்-

## நலன்புரி நிலையங்களிலுள்ளோரின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன் புரிநிலையங்களில் தங்கியுள்ள மக்களின் பிரச்சினைகளை அறிந்து உடனடியாக தீர்த்துவைப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளை புதுக்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள செயலணிக்குழு மேற்கொண்டுள்ளது.

மக்களினுடைய முக்கிய தேவைகள் அவர்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள் ஆகியவற்றை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கிளி.மாவட்ட அனைத்து நலன்புரி நிலையங்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பொறுப்பாளர் தமிழர் புனர் வாழ்வுக் கழகப் பிரதிநிதி, தமிழீழ நிர்வாக சேவைப் பிரதிநிதி, தமிழீழ சுகாதார சேவை பிரதிநிதி, தமிழீழ மருத்துவப் பிரிவுப் பிரதிநிதி, சுகாதாரச் சேவைப் பிரதிநிதி ஆகியோர்கள் தலா ஒருவர் வீதம் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு நலன்புரி நிலையத்துக்கும் குழுக்களாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் முகாம்களில் தங்கியுள்ள மக்களின் உணவு, சுகாதாரம்,உடை, மற்றும் ஏனைய மக்களின் அவசியத் தேவைகளை இனங்கண்டு செயலணிக்குழுவுடன் தொடர்பு கொண்டு அதனைத் தீர்த்து வைக்கும் இந்த வகையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. (லோ)

## தொற்றுநோய் வாய்ப்புக்குறித்து உன்னிப்பாக அவதானிக்கிறோம்

### -தமிழீழ சுகாதாரசேவைகள் பொறுப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

கடற் பெருக்கால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியிருக்கின்ற மக்களின் சுகாதார நடைமுறைகளை- தொற்று நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களைப் பற்றி நாம் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் எனத் தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் அருண்தெரிவித்துள்ளார்.

கடல் அனர்த்தம் காரணமாக பெரும் பாதிப்புக்குள்ளாகி முகாம்களில் தங்கியுள்ள மக்களின் சுகாதார நிலை பற்றிக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஒவ்வொரு முகாங்காமிலும் தங்கியுள்ள மக்களின் சுகாதார நிலையை அவதானிப்பதற்காக சுகாதார சேவையினரும் திலீபன் மருத்துவ சேவையினரையும் நியமித்திருக்கிறோம். அதுமட்டுமன்றி மருத்துவபீட மாணவர்கள், மருத்துவக்கல்லூரி மாணவர்கள் ஆகியோரும் இணைந்து கவனித்து வருகின்றனர்.

தொற்றுநோய்களின் தாக்கத்தில் இருந்து மக்கள் தம்மைப்பாதுகாத்துக்கொள்ள வெள்ளப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்தோர் தொகை 30000வரை செல்லலாம்

(கொழும்பு)

கடல் கொந்தளிப்பு காரணமாகதமிழர் தாயகம் உட்பட இலங்கைத்தீவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 30 ஆயிரத்திற்கு மேலாக இருக்குமென தற்போது வெளியாகி வரும் தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது. சமூக சேவைகள் அமைச்சின் தகவல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் நேற்றும் 100 சடலங்கள் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் தொடர்ந்து மேற்கொண்டு வரும் சடலங்களை மீட்கும் பணியில் நேற்று மட்டும் 100இற்கு மேற்பட்ட சடலங்கள் கண்டெடுக்கப்பட்டு உடனடியாக அந்த அந்த இடங்களில் வைத்து தகனம் செய்யப்பட்டுள்ளன. நேற்றுப் பெறப்பட்ட சடலங்கள் அனைத்தும் நகர்ப்பகுதிக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் நேற்று 25 சடலங்கள் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

கடற் கொந்தளிப்பால் ஏற்பட்ட பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்பு நடவடிக்கையில் நேற்றைய தினம் 25 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என புதுக்காட்டுச்சந்தியில் அமைந்துள்ள செயலணிக் குழு அலுவலகத்தின் இறுதிப்புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

கிளி.சந்தை வர்த்தகர் சங்கம் தரும் அன்பான

## அறிவித்தல்

அண்மைய அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சகல விதத்திலும் உதவிய வர்த்தகர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, தொடர்ந்து பணிகளைக் கவனிக்க செயலணிக் குழு அமைக்கப்பட்டதால் தேவை ஏற்படும் பட்சத்தில் தங்களை நாம் நாடிவருவோம் என அன்புடன் அறியத்தருகிறோம்.

பொதுச்சந்தை வர்த்தகர் சங்கம்,
கிளிநொச்சி.

(சி.11164)


# சேதமடைந்த வீடுகளிலிருந்து பொருட்களைத் திருடும் படையினர்

யாழ். வடமராட்சியின் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட கடல் அனர்த்தம் காரணமாக இப்பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்ததைத் தொடர்ந்து இவ்வாறான வீடுகளில் இருந்த மக்களின் உடமைகள் அனர்த்தம் நிகழ்ந்த பகுதிகள் எங்கிலும் சிதறிக்கிடக்கின்றன.

இவ்வாறு சிதறிக்கிடக்கும் பொதுமக்களின் உடமைகளைக்கையாடும் (திருட்டு) நடவடிக்கைகளில் சிறிலங்கா கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக கற்கோவளம், மணற்காடு வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளில் சேதமடைந்த நிலையுள்ள வீடுகளினுள் புகுந்தே படையினர் இவ்வாறாக தம் கைவரிசையை காண்பித்து வருகின்றனர்.இதைவிட இலத்திரனியல் பொருட்கள் ரி.வி.றேடியோ, பான், கதிரை,மேசை,அலுமாரிகள் என்பவற்றையும் படையினர் கையகப்படுத்தி இராணுவ வாகனங்களில் ஏற்றிச் செல்வதை அங்கு காணக் கூடியதாக உள்ளது. (33)

# முல்லைக்கு உணவு மருந்துப்பொருட்கள் பொகலந்தலாவ மக்களால் வழங்கல்

முல்லை மாவட்டத்தில் கடற்பூமி அதிர்ச்சி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு மலையகம் கெகஸ் வோல்ட் மேல்பிரிவு போகலந்தலாவ பொதுமக்களால் சேகரிக்கப்பட்டு இரு பேருந்துகளில் பல இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் ,மருந்துப்பொருட்கள், உடுபுடவைகள் என்பன இப்பகுதி மக்களால் எடுத்துவரப்பட்டுள்ளன. இப்பொருட்களை இவர்கள் இன்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி ஆறுதல் தெரிவிக்கவுள்ளனர். (14)


## துயர் பகிர்கின்றோம்

### பிரிவுத்துயரின் ஐந்தாம் நாள்

**செல்வி மரியநாயகம் மேரிபியூனா**
(மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு)
[மூன்றாம் வருட மாணவி,தாதியர் பயிற்சிப்பாடசாலை, யாழ்ப்பாணம்]

**செல்வன் ஜெகதீஸ்வரன் மேனுசன்**
(மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு)

இயற்கையின் சீற்றத்திற்கு இலக்காகி எம்மை எல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டு அலை கடலுடன் சங்கமித்துப் போனவர்களின் நினைவுகளில் வாடி நிற்கும் எமது நண்பன், Dr மரியநாயகம் ஒஸ்மன் சார்ள்ஸ் (போதனா வைத்தியசாலை றாகமை கொழும்பு) அவர்களினதும், அவரின் குடும்பத்தினரதும் துயரத்தில் பங்கு கொள்வதுடன் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து உறவுகளினது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5080) நண்பர்கள்.

## கண்ணீர் வணக்கம்



**திருமதி அ.லதா, அவரின் மகன் அனோஜன்**
(கள்ளப்பாடு, முல்லைத்தீவு.)

துணைவியாரின் பிரிவாலும், மகனின்பிரிவாலும், சகோதரர்கள் மைத்துனர்கள் ,உறவினர்கள் பிரிவாலும் மீளாத் துயரில் ஆழ்ந்திருக்கும் திரு. அ.அன்ரனி (வீரன்) அவர்களுக்கு எம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, இவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இனியவாழ்வு இல்லத்தினர்,
வள்ளிபுனம்.

(5510)

## வரிவிளம்பரம்

### பெற்றுக்கொள்ளவும்

சகல வகுப்புகளுக்குமான பாடப்புத்தகங்களும் கொப்பிவகைகளும் புது வருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம். உயர்ச்சி புத்தகசாலை, துணுக்காய்சாலை, மல்லாவி. (4145)

### வகுப்புக்கள் ஆரம்பம்

ஜேம்பிறிஜ் கல்லூரி கிளிநொச்சி 2007. A/L கணித, விஞ்ஞான கலைவர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்:- 03.01.2005 (திங்கள் 8.00 A.M) (5448)

### வகுப்புக்கள் ஆரம்பம்

ஜேம்பிறிஜ் கல்லூரி கிளிநொச்சி தரம் 05.தொடக்கம்O/L வரையான வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 01.01.2005 (சனிக் கிழமை 8.00A.M) (5448)

### தென்னங்காணி விற்பனைக்குண்டு

சுதந்திரபுரம் மத்தியில் 20 ஏக்கர் தென்னந்தோட்டமும், 5ஏக்கர் வயல் காணியும்விற்பனைக்குண்டு. தொடர்பு ந.விக்னேஸ்வரன், இரட்மைஸ் பாம், சுதந்திரபுரம் மத்தி, உடையார்கட்டு. (5508)

### தவறிவிட்டது

தலையசிங்கம் செந்தீபன் என்பவரின் அடையாள அட்டையும் (830052232V) பயண அனுமதி அட்டையும்,சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளிட்ட பணப்பை பளைக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் M.O.H. அலுவலகத்தில் அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (5515)

### தொடர்பு கொள்ளவும்

தர்மலிங்கம் அரசலங்குமாரி (பெரியபவா) வயது:- 32,இடம்:- கள்ளப்பாடு, முல்லைத்தீவு.

தர்மலிங்கம் கௌதமி வயது:- 14, இடம்:- கள்ளப்பாடு, முல்லைத்தீவு.

தேடுபவர்
றஞ்சி(அத்தை), இரணைப்பாலை, 5ஆ,ம் வட்டாரம் செம்மங்குன்று. (5079)

## கிளிநொச்சி வர்த்தகர்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல்

**இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு அவசர உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்த வர்த்தகர்களுக்கும், உடன் நின்று ஒத்துழைப்பு நல்கிய வர்த்தகர்களுக்கும் சங்கம் தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது. மேலும் மேற்படி வேலைத் திட்டங்களுக்கு செயலணிக்குழு அமைக்கப்பட்டதால் உதவிகள் தேவை ஏற்படும் பட்சத்தில் சங்கம் நேரடியாகத் தங்களை அணுகும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

வர்த்தகர் சங்கம்,
கிளிநொச்சி.

(சி.11163)

## காணவில்லை

### நற்குணசிங்கம் சத்தியா(வயது-15)



4ஆம் வட்டாரம் முள்ளியவளை, முல்லைத்தீவை வசிப்பிடமாகக்கொண்டவர். கடந்த 26.12.2004 அன்று ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின் போது காணாமல் போய் விட்டார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ் குறிப்பிடும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

நற்குணசிங்கம் லதா
*4ஆம் வட்டாரம், முள்ளியவளை.*

அம்பாள் இரும்புத் தொழிலகம்
*உலகளந்த பிள்ளையார் முன்வீதி, புதுக்குடியிருப்பு.*

தகவல்:-
**ந.சதீஸ்.**

(5512)

## துயர் பகிர்கின்றோம்



பிறப்பு 19 - 07 - 1978 | இறப்பு 26 - 12 - 2004

தமிழீழ காவல்துறை
தலைமைக்காவலர் ஜெகதீஸ்வரி
சுரேஸ்குமார் ஜெகதீஸ்வரி
நி.மு.யாழ்.மாவட்டம்
த.மு குமாரபுரம், தண்ணீரூற்று,
முள்ளியவளை.



பிறப்பு 03 - 11 - 1972 | இறப்பு 26 - 12 - 2004

தமிழீழ காவல்துறை
பரிசோதகர் குணேஸ்வரன்
கந்தசாமி குணேஸ்வரன்
நி.மு.யாழ்.மாவட்டம்
த.மு.யாழ். மாவட்டம்.



பிறப்பு 23 - 08 - 1985 | இறப்பு 26 - 12 - 2004

தமிழீழ காவல்துறை
தலைமைக்காவலர் தேவப்பிரியா
சுப்பிரமணியம் தேவப்பிரியா
நி.மு.செல்வாநகர், கிளிநொச்சி.
த.மு.கண்ணகைபுரம், நஞ்சுண்டான் கரடு, அக்கராயன்.

கடந்த 26.12.2004 அன்று கடலில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் முல்லைத்தீவில் சாவடைந்தனர். இவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு இவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் இவர்களது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

"தமிழீழ காவல்துறையினர்" (5513)

# கடல் கொந்தளிப்பால் சீரழிந்துள்ள தெற்காசியாவை சீரமைக்க பெருமளவில் நிதியுதவி வேண்டும்

-ஐ.நா. உலக நாடுகளுக்கு அழைப்பு

**கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட தெற்கு ஆசிய நாடுகளைச் சீரமைக்க பல நூறு கோடி ரூபாய் தேவைப்படும் என்று ஐ.நா. கூறியுள்ளது. எனவே தனிப்பட்ட நபர்களும்,அரசுகளும் தாராளமாக நிதி உதவி செய்யவேண்டும் என்று ஐ.நா.சார்பில் வேண்டுகோள் விடுக்கப் பட்டது. மேலும் மீட்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ளாவிடில் தொற்று நோய்கள் பரவும் அபாயமும் உள்ளது என்றும் ஐ.நா. எச் சரித்துள்ளது.**

ஐ.நாவுக்கான மனிதாபிமான ஒருங்கிணைப்பு விவகார அலுவலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஜான் ஈக்லேண்ட் இது குறித்துக் கூறியதாவது; தெற்கு ஆசிய நாடுகளில் சுனாமி எனப்படும் இராட்சத அலைகளால் கொடூர விளைவுகள் ஏற்பட்டுள்ளன. இதில் இருந்து பாதிக்கப்பட்ட நாடுகள் மீண்டுவரவும் பழைய நிலைமைக்குத் திரும்பவும் பல கோடி ரூபாய் நிதி தேவைப்படும். இது வரை வந்த தகவல்களின் அடிப்படையில் இந்த கோரக் கடற் கொந்தளிப்பால் 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இறந்து விட்டனர். கடந்த 50 ஆண்டுகளில் இது போன்றதொரு இயற்கைச் சீற்றம் இதற்கு முன் ஏற்பட்டதேயில்லை.

கடந்த ஆண்டு இதே நேரத்தில் ஈரானின் பாம் நகரில் ஏற்பட்ட பூகம்பத்தில் 31 ஆயிரம்பேர் இறந்தனர். 1இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர். இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை மேற்கொள்ளும் பணி தற்போதுதான் முடிந்துள்ளது. அதற்குள் சுனாமி பெரியஅழிவை ஏற்படுத்திவிட்டது. இதற்கு முன் கடந்த 1998 ஆம் ஆண்டு மத்திய அமெரிக்காவில் கடற்கொந்தளிப்பு ஏற்பட்டது. 10 ஆயிரம்பேர் இறந்தனர். இதில் இருந்து அவர்கள் மீண்டு விட்டனர். ஆனால் சுனாமி பாதிப்பில் இருந்து மீளப் பல ஆண்டுகள் பிடிக்கும். சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவி செய்ய 20இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து நூற்றுக் கணக்கான விமானங்கள் மருந்து, மற்றும் உணவுப்பொருட்களுடன் செல்லத் தொடங்கியுள்ளன. இந்த உதவி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இன்னும் 48 மணிநேரத்தில் சென்ற டையும். ஆனாலும் இந்த உதவி போதாது. இன்னும் உதவி செய்ய ஏராளமான நிதி உதவி தேவை.

சுனாமி எனப்படும் அலைகளால் ஏற்பட்டமுழு அழிவைக் கணக்கிட இன்னும் சில வாரங்கள் பிடிக்கலாம். கடற் கொந்தளிப்பால் . இலட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் இறந்து விட்டனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இறந்தவர்களின் உடல்களை மீட்டு உடன டியாக அந்தஉடல்களைப் புதைக்க வேண்டும். மேலும் குடிநீர் விநி யோகத்தைச் சீராக்க வேண்டும். மீட்கப்படாத உடல்களாலும் மாசடைந்த குடி நீராலும் தொற்று நோய்கள் மிக வேகமாகப் பரவும் அபாயம் உள்ளது .எனவே இந்தப் பணிகளை போர்க்கால அடிப் படையில் மேற்கொள்ளவேண்டும். சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புமற்ற இயற்கைஅழிவை விட மிகக் கொடூரமாகவுள்ளது. இந்தோனேசியா, இலங்கை, தாய்லாந்து, இந்தியா, மாலைதீவு, மலேசியா, மியான்மர், வங்கதேசம் ஆகிய 8 நாடுகள் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளன. இவ்வாறு ஜான்ஈக்லேண்ட் கூறினார்.



இந்தோனேசியாவில் ஆசே மாநிலத்தில் சுனாமி அலையால் உறவினரை இழந்த பெண்ணொருவர் கதறி அழுவதையும் சிகிச்சைக்காக இராணு வவைத்திய சாலையில் காத்திருக்கும் இரு பெண்களையும் படத்தில் காணக.

## நாற்பதாயிரம் பேர் பலி!

பூகம்பம் மையம்கொண்ட இந்தோனேசியாவையும் சுனாமி அலைகள் கடுமையாகத் தாக்கியதில்பலியானோர் தொகை 40ஆயிரமாகஅதிகரித்திருக்கிறது. அங்குள்ள பெரும்பாலானகட்டடங்கள், வணிகவளாகங்களைக் தரைமட்ட மாக்கியுள்ளது. ஆயிரக்கணக்கான மக்களைக் காணவில்லை. மிகமோசமான சுனாமி அலைகள் தாக்குதல் காரணமாக தொடர்பு முற்றிலு மாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

அடுத்தடுத்து சுனாமி அலைகள் தாக்குதலால் மீட்புப் பணிகள் சிறிது தேக்கமடைந்துள்ளன. மீட்புப் பணியில் இந்தோனேசியா இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## அந்தமானில் தொடர் நில அதிர்வுகள் மலை உச்சிகளில் மக்கள் தஞ்சம்

அந்தமானில் தொடர்ந்து நில அதிர்வுகள் ஏற்படுவதையிட்டு தொடர்ந்தும் அப்பகுதிகளிலுள்ள மக்கள்தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி வருகின்றனர். இப்பகுதியில் தொடர்ந்து ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் கடற்கொந்தளிப்பின் காரணமாக மூவாயிரம் பேர் பலியாகியுள்ளனர். மேலும் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோரைக் காணவில்லை.

நிக்கோபார், நான்கோரி போன்ற பகுதிகள் பெரும் பாதிப்புக்குஉள்ளாகியுள்ளன. லிற்றில் அந்தமான் பகுதியில் 10ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மலை உச்சியிலுள்ள காடுகளில் தங்கியுள்ளதாக கூறப்படுகின்றது.

அந்தமானில் பாதிக்கப்பட்ட மக்கள் விமானம் மூலம் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அந்தமானில் நேற்று முன்தினம் இரவிலிருந்து மீண்டும் நில அதிர்வுகள் தாக்கியுள்ளதாகவும், தொடர்ந்தும் நில அதிர்வுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் புவியியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## பூகம்பப் பாதிப்புக்களைக் கண்டறிய செயற்கைக்கோள்கள் நிலை நிறுத்தம்

கடல் கொந்தளிப்பால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த செயற்கை கோள் படங்கள், நெருக்கடி கால நிர்வாகக் குழுவுக்கு உடனுக்குடன் அனுப்பிவைக்கப்படுகின்றன என்று இஸ்ரோதலைவர் மாதவன் நாயர் கூறினார் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் தலைவர் மாதவன் நாயர் நிருபர்களிடம் கூறியதாவது,

தொலை உணர்வு செயற்கைகோள்கள் ஐ.ஆர்.எஸ். 1-சி,1-டி,ரிசோர்ஸ்சாட் -1, கடலிலும்,நிலத்திலும் ஏற்படும் வானிலை மாற்றங்கள் குறித்த தகவல்களைக் சேகரிக்கும் 'கல்பனா-1'என்ற செயற்கைக் கோள்களையும் நாம் விண்ணில் செலுத்தியுள்ளோம். கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தைத் தொடர்ந்து உருவான கடல் கொந்தளிப்பால் தென்மாநில கடற்கரையோர பகுதிகளும்,அந்தமான், நிகோபார் தீவுகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது நமது தொலைஉணர்வு செயற்கைக்கோள்களை கடல் கொந்தளிப்பால் பாதித்த பகுதிகளைப் பற்றிய தகவல்களை சேகரிக்கும் வகையில் நிலை நிறுத்தியுள்ளோம் என்றார்.

## ஜப்பானில் பூகம்பம்!

ஜப்பானில் நிக்காடா என்ற இடத்தில் நேற்று முன்தினம் பூகம்பம் ஏற்பட்டது. ஜப்பானின் வடக்குபகுதியில் உள்ள இப்பிரதேசத்தில் மாலை 6.30மணிக்கு ஏற்பட்ட இந்த நில நடுக்கத்தால் எத்தனை பேர் பாதிக்கப்பட்டனர், என்றவிபரம் தெரியவில்லை

## ஈராக் தேர்தலைப் புறக்கணிக்க பின்லேடன் வேண்டுகோள்

ஈராக்கில் அடுத்தமாதம் (சனவரி) நடக்க இருக்கும் தேர்தலைப் புறக்கணிக்கும்படி ஈராக்கியர்களை அல்-ஹைதா இயக்கத் தலைவர் பின்லேடன் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்தத் தேர்தலில் பெரும்பான்மைஇனமான ஷியா முஸ்லிம்கள் பெரியஅளவுக்கு வெற்றி பெறுவார்கள் எனஎதிர்பார்க்கப்படுகிறது.இதனால் சிறுபான்மையினரான சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த தீவிரவாதிகள் தேர்தலைத் தடுக்க முயன்று வருகிறார்கள். இந்த நிலையில் தேர்தலைப் புறக் கணிக்கும்படி பின்லேடன் ஈராக்கியர்களைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார். அல்ஜசீரா தொலைக் காட்சி பின்லேடனின் உரையை ஒளிபரப்பியது.

## கடல் பூகம்பத்தால் புவிதன் அச்சிலிருந்து விலகியது ஆசிய நாடுகள் பலவும் நகர்வு!

(நியூயோர்க்)

கடல் பூகம்பம் குறித்து அமெரிக்காவைச் சேர்ந்த புவியியல் வல்லுனர்கள் ஆய்வு நடத்திய போது பூமி தனது அச்சில் இருந்து விலகி விட்ட அதிர்ச்சியூட்டும் தகவல் கிடைத்துள்ளது.

பூமி தனது நிலையான சுற்றுப் பாதையில் இருந்து தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றது.

ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தின் தாக்கத்தால் பூமியில் கடும் அதிர்வுகள் உருவானது. இதில் பூமி தனது அச்சில் இருந்து சற்று விலகி விட்டது. ஆசியாவில் பல நாடுகள் இருப்பிடத்தை விட்டு விலகியுள்ளன.

ஆய்வின் போது கிடைத்த திடுக்கிடும் தகவல்கள் வருமாறு:-

பூமி தனது அச்சில் இருந்து சற்றுவிலகிஇருக்கிறது; ஆசியாவில் பல நாடுகள்நகர்ந்து விட்டன; இந்திய பீடபூமி தாழ்ந்து, பர்மியப் பீடபூமி உயர்ந்து விட்டது; சுமத்திராவுக்குத் தென்கிழக்கில் சிறிய தீவுகள் 20 மீற்றர்கள் வரை இருப்பிடத்தை விட்டு நகர்ந்துள்ளன; சுமத்திராதீவின் தென்மேற்கு முனை36 மீற்றர் நகர்ந்துள்ளது; இயற்கை ஏற்படுத்திய நிகழ்வு காரணமாக ஆசிய வரைபடத்தில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன; இந்த மாற்றங்கள் காரணமாகப் பூமியின் தட்பவெப்ப நிலையிலும் மாறுதல்கள் உருவாகக் கூடும். சில பகுதிகளில் குளிர் அதிரிக்கலாம்அல்லது வெப்பம் அதிகரிக்கும்; தனது அச்சில் இருந்து விலகி ஆட்டம் கண்டுள்ள பூமி மீண்டும் பழைய நிலைக்கு திரும்பிக் கொண்டு இருக்கிறது; பூமியின் இயக்கத்தில் சில மாறுதல்கள் இப்போதே உருவாகத் தொடங்கிவிட்டன.



பலூ ஜாவில் நடைபெற்ற தாக்குதல்கள் முடிவுக்கு வந்த பின்னர் மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட நிலையில் வீடுவீடாகத் தேடுதல் நடத்தும் அமெரிக்கப் படையின்

## கடல் நீர் மட்டம் உயர்வதால் எதிர்காலத்தில் பேரழிவுகள் இலகுவாக உருவாகும் அபாயம்

-கிரீன் பீஸ் அமைப்பின் நிபுணர் எச்சரிக்கை

பூமிப்பந்து வெப்பமடைவதும், சுற்றுச்சூழல் மாசுபடுவதும்,பவளப்பாறைகள் அழிக்கப்படுவதும்,கடல்நீர் மட்டம் அதிகரிப்பதும் கரையோரங்களுக்கு சுனாமி போன்ற பேரழிவுகளை எதிர்காலத்தில் சுலபமாக வரவழைக்கும் அபாயம் உள்ளது.

சுற்றுசூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உலகில் முன்னணியாகத் திகழும்' கிரீன் பீஸ்' அமைப்பின் நிபுணர் பிரட்ஸ்மித் கூறுகையில;'உலகின் பல நாடுகளின் கடற்கரைக்கு அபாயம் நிலவுகிறது. புதிய சாலைகள் அமைப்பது இறால் பண்ணைகளின் பெருக்கம், சுற்றுலா மற்றும் தொடர்ச்சியான விரிவாக்கத் திட்டங்கள் பல ஆசிய நாடுகளின் கடலோரப் பாதுகாப்பைச் கேள்விக்குறியாக்கி உள்ளன' என்கிறார். பூமியில் அடிக்கடி பற்றியெரியும் தீக்காற்று மண்டலத்தை மாசுபடுத்துகிறது பூமிப் பந்தும் வெப்பமடைகிறது. இதனால் கடலில் அடிக்கடி புயல் அபாயம் ஏற்பட்டு கடல் நீர்மட்டம் உயருகிறது. இது கடற்கரைப் பகுதியில் மிகுந்த அரிமானத்தை ஏற்படுத்துகிறது.

20ஆம் நூற்றாண்டில் சராசரியாக ஆண்டுக்கு முக்கால் அடி கடல் மட்டம் உயர்ந்து வருவதாகக் கணக்கிடப்பட்டு இருக்கிறது. பருவநிலை மாறுபாடு குறித்து ஐ.நா. சபையின் நிபுணர் குழு அடுத்த நூற்றாண்டில் கடல் மட்டம் இன்னும் வேகமாக உயரும் என்று மதிப்பிட்டுள்ளனர்.

இதனால் மாலைதீவு போன்ற நாடுகள் சுனாமித் தாக்குதலில் கடலில்மூழ்கி காணாமற்போகும் அபாயம் அதிகரித்துள்ளது. அங்கு கடல் மட்டத்திற்கு மேல் 6அடி உயரத்தில்தான் தீவு இருக்கிறது. வங்கதேசத்தில் 17 இலட்சம் மக்கள் கடல் மட்டத்திற்கு மூன்று அடி உயரமான நிலப்பரப்பிற்தான் வசிக்கின்றனர். அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலும் இதே நிலைதான்.

# மட்டக்களப்பில் 23 நலன் புரிநிலையங்கள்

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பராமரிப்பு

(அலுவலக செய்தியாளர்)

**மட்டக்களப்பில் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 23 நலன்புரி நிலையங்களில் தங்க வைத்து பராமரித்து வருகின்றது.**

பாடசாலைகள்,தேவாலயங்கள், பொது இடங்கள் எனச் சுமார் 12 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சமைத்த உணவு, உடை மற்றும் இதர வசதிகளை வழங்கி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நான்காவது நாளாக பராமரித்து வருகின்றது.

மட்டக்களப்பின் 14 பிரதேச செயலர் பிரிவுகளில் 7 பிரதேச செயலர் பிரிவுகள் இயற்கை அனர்த்தத்தால் மிக மோசமாகப் பாதிப்புற்றுள்ளன.

ஏறாவூர்பற்று, காத்தான்குடி, வாழைச்சேனை, ஓட்டமாவடி, மட்டக்களப்பு நகரம், ஆரயம்பதி, களுவாஞ்சிக்குடி, வாகரை என்பன பாரிய உயிர் மற்றும் சொத்தழிவுகளைச் சந்தித்துள்ளன.

அனைத்தும் இழந்து நிர்க்கதியான மக்களிற்கு உதவ புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் முன்வந்துள்ளன.

அத்துடன் கொழும்பில் பல அமைப்புக்களும், வர்த்தகர்களும் பெருமளவு உதவிப் பொருட்களை வழங்கி வருகின்றனர்.

3000 குடும்பங்கள் வாகரைப் பிரதேசத்தில் நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளன. இவர்களுக்கான உணவு மற்றும் இதர பொருட்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் வழங்கிப் பராமரிக்கும் செயற்பாடுகளை பொறுப்பேற்றுள்ளனர் இவற்றுடன் மட்டக்களப்பின் கரையோரக் கிராமங்களில் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள சடலங்களை மீட்கும் பணிகளிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழக தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை 1488 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் மீட்புப்பணி இடம் பெற்றுவருகின்றன நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு தொற்று நோய் அபாயம் ஏற்படாதவாறு மருத்துவ சுகாதார வசதிகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றது. (சோ)

# வாகரை வைத்தியசாலை அடித்துச் செல்லப்பட்டது

திருகோணமலை எல்லையில் உள்ள வாகரை வைத்தியசாலையும் கடலில் முற்றாக அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இப்பகுதியில் 278 சடலங்கள் விடுதலைப்புலிகளால் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இப்பகுதிக்கான நிவாரணப் பொருட்கள் எடுத்துச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது. பனிச்சன்கேணி பாலம் உடைந்ததால் போக்குவரத்துத் தடை ஏற்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் வடக்குப் புறமாக உள்ள சலப்பை ஆறு என்னும் இடத்தில் 300 மீற்றர் தரைப் பாதை கடலில் அடித்துச் செல்லப்பட்டதால் போக்குவரத்துத் தடை காணப்படுகின்றது. வாகனங்கள் செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது. சுமார் 4 அடி கடல் வெள்ள நீர் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. (32)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு வவு.மாவட்ட மக்கள் உதவி

வடக்குக் கிழக்கு ரீதியான இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வவுனியா தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் மாவட்ட வாழ் மக்களிடமிருந்து உதவிப்பொருட்களைப் பெற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்தும் அந்தந்தப் பிரதேசங்களுக்குச் சென்று எமது பணியாளர்களும், ஏனைய தொண்டர்களும் உலர் உணவுப்பொருட்கள், ஏனைய அவசர அவசியப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றனர். இவ்வாறு விநியோகம் செய்யப்பட்ட பொருட்களின் விபரம் வருமாறு: முல்லைத்தீவு மாவட்டம் 03 பாரவூர்திப் பொருட்கள் மட்டக்களப்பு 03, திருகோணமலை 02, கிளிநொச்சி 03, யாழ்ப்பாணம் 01 என்ற பாரவூர்திப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# தமது எஞ்சிய உடைமைகளை மக்கள் மீட்டெடுக்கின்றனர்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு கரையோரப்பகுதிகள் யாவும் முற்றாக வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகிச் சேதமடைந்த நிலையில் மக்களின் உடைமைகளில் எஞ்சியவை சிலவற்றை மக்கள் மீட்டெடுத்து வருகின்றனர்.

கடல் கொந்தளிப்பு வழமையான நிலைக்குத் திரும்பியவுடன் மக்களைத் தமது இடத்திற்குச் சென்று மீட்டு எடுக்கக்கூடிய பொருட்களை எடுக்குமாறு விடுக்கப்பட்ட அறிவித்தலைத் தொடர்ந்து மக்கள் தமது இடங்களுக்குச் சென்று கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி இருந்த மீட்கக்கூடிய சில பொருட்களை எடுத்துக்கொண்டு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்கின்றனர்.

இவ்வாறு பொருட்களை மீட்கும் மக்கள் மனதில் ஏற்பட்ட துயரத்தின் மிகுதியால் கண்களில் நீர்வழிய பொருட்களை மீட்டு எடுத்து வருகின்றனர்.

இவ்வாறு மக்கள் தமது பொருட்களை தேடி மீட்டு எடுக்கும் பணிக்கு விடுத்தலைப்புலிகளும், காவல்துறையினரும் தமது முழுப் பாதுகாப்பையும் வழங்கி மக்களுக்கு உதவி புரிந்து வருகின்றனர். தொடர்ந்து மக்கள் தமது பொருட்களைத் தேடிப்பெறுவதற்கு முழுஅளவிலான ஒத்துழைப்பையும் வழங்கி அனைத்து உடைமைகளையும் மீட்டெடுக்கும் பணியில் மிகவும் முனைப்புடன் செயற்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. (கு.ச)

# திருமலைக்கு அனுப்பப்பட்ட உதவிப் பொருட்களை அபகரிக்க சிங்கள பேரினவாதிகள் முயற்சி

(திருமலை)

வவுனியாவில் இருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திருகோணமலைக்கு திங்கட்கிழமை பாரவூர்தி மூலமாக அனுப்பி வைத்த நிவாரணப் பொருட்களை பலாத்காரமாக இறக்கி வேறு இடத்திற்கு அனுப்பி வைக்க ஹபரணையில் சிங்கள பேரினவாதிகள் முயற்சி செய்தனர்.

ஹபரணைச் சந்தியில் நின்ற குழுவொன்று அங்கு காணப்பட்ட பொலிசாரின் உதவியுடனேயே இந்த முயற்சியில் ஈடுபட்டனர். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இது பற்றி தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனுக்கு அறிவித்ததையடுத்து அவர் இது தொடர்பாக ஹபரணை பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இதனையடுத்து நிவாரணப் பொருட்கள் பாதுகாப்பாக திருகோணமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் திருகோணமலை கண்டிவீதியில் ஹபரணைச் சந்தியில் திங்கட்கிழமை இரவு 9.30 மணியளவில் இடம் பெற்றது. தென்பகுதியில் எமது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தே இப்பொருட்களை அவர்கள் இறக்க முற்பட்டனர். இதற்கு பொலிசாரும் உடந்தையாக இருந்தார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வைத்திய சேவைகளைப் புரிவதற்கு இந்தியாவில் இருந்து 25 பேரடங்கிய மருத்துவக் குழு ஒன்று வந்துள்ளது. இவர்களில் சிலர் திருகோணமலைக்கும் வந்துள்ளனர். இவர்கள் செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம் திருகோணமலை குச்சவெளி, மூதூர், ஈச்சிலம்பற்று பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

## உறுதியளிப்பு

அமெரிக்கா, சீனா, ஜேர்மனி, கனடா, சிங்கப்பூர், உக்ரைன், ஐக்கிய அரபு எமிரேஜ் ஆகிய நாடுகளும், செஞ்சிலுவை அமைப்புகளினூடாக இலங்கை உள்ளிட்ட நாடுகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி அளிப்பதாக உறுதியளித்துள்ளன.

எஃபியின் நாட்டு நிவாரணப் பணியாளர்கள் ஒருதொகுதியினர் நேற்று கொழும்பை வந்தடைந்தனர். அமெரிக்க கடற்படைக் கப்பல் ஒன்றும் கொழும்பை நோக்கி வந்துகொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகளை வழங்கியோர் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர மனிதாபிமான உதவிகளை பொதுமக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் வர்த்தக நிலையங்கள்,தனியார்கல்வி நிலையங்கள் என்பன தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரிடம் கையளித்துவருகின்றனர்.

நேற்று முன்தினம் சமைத்த உணவாகவும்,உலர் உணவாகவும், பால்மா வகைகள் உடுபுடவைகள் என்பனவைகளுடன் பணமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் கையளிக்கப்பட்டன. கையளித்தவர்களதும் பொருட்களதும் விபரங்களாவன.

| பெயரும் முகவரியும் | உணவும் வேறு பொருட்களும் |
|---|---|
| நு.மொ.வி. நிலையம் க.தெ.ப.நோ.கூ.சங்கம் கிளிநொச்சி | உணவல்லாத பொருட்கள் |
| கடற்றொழிலாளர் சங்கம் தட்டுவன் கொட்டி | 15000/- |
| மானிப்பாய் மக்கள் | உணவு 1000 பார்சல் |
| முழங்காவில் பிரதேச அரசியல்துறையும், மக்களும் | 39,540 ரூபா பணமும், உலர் உணவும், உடைகளும். |
| அவுஸ்திரேலியாவில் இருந்து வந்த தொண்டர்கள் | உடைகள் 2 பை |
| அக்கராயன் பிரதேச மக்களும், வர்த்தகர்களும். | 70,000/- பெறுமதியான உலர் உணவும், உடைகளும். |
| வட்டக்கச்சி மக்கள் | 43,650/- பெறுமதியான உலர் உணவும், உடைகளும் |
| மானிப்பாய் பரீஸ்லியோ கழகம் | உடை, உலர்உணவு,மருத்துவப் பொருட்கள் |
| நெஸ்பிறே கம்பனி அம்மன் களஞ்சியம் ஊடாக | பால்மா, பிஸ்கட் |
| கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம் நு.மொ.வி.நிலையம் | உணவும், உணவு அல்லாத பொருட்களும். |
| தேசிய எழுச்சிப் பேரவை, அரசியல் துறை, நிதித்துறை கிளிநொச்சி | பால்மா,உடைகள், உணவுப் பொருட்கள். |
| கிளிநொச்சி மாவட்ட, முல்லை மாவட்ட மக்கள் | சமைத்த உணவும்,உலர் உணவும், உடைகளும். |
| கிளிநொச்சி வர்த்தகர்களும், அக்கராயன் பிரதேச வர்த்தகர்களும் | உலர் உணவும்,உடைகளும், பால்மா வகைகளும். |
| தனியார் கல்வி நிலையம் | சமைத்த உணவும்,உடைகளும். |
| ஆர்.வி.பந்தல் சேவை தருமபுரம் | ஒருதொகுதி உலர் உணவு, உடைகள் (சோ) |

# சுண்டிக்குளத்தில் 13 சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைப்பு

(விசுவமடு)

சுண்டிக்குளம் பகுதியில் இறந்தவர்களின் 13 சடலங்கள் மீட்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பாலகிருஸ்ணன் சுபேந்தினி (வயது-ஒன்றரை) சுண்டிக்குளம், சுந்தரமூர்த்தி யாழினி (வயது-3) சுண்டிக்குளம், ஜெயகுராசா றமோதன் (வயது ஒன்றரை) சுண்டிக்குளம், தர்மலிங்கம் நீபன் (வயது-5) சுண்டிக்குளம், யோகீஸ்வரன் அம்பிகா (வயது-26) சுண்டிக்குளம், சொ. முகவரி நகர்கோவில்" ஜேசுராசா சகாயநாயகி (மஞ்சி) (வயது-27) சொ.முகவரி பெரியவிளான் த.மு.பேப்பாரபிட்டி, சுப்பிரமணியம் நமசிவாயம் (வயது-35) உழவனூர் தம்பிராசபுரம், பிரான்சிஸ் ஞானம் (வயது-51) சுண்டிக்குளம் இச்சடலங்களை விட ஒரு வயது மதிக்கத்தக்க பெண் குழந்தை ஒன்றும் எட்டுவயது மதிக்கத்தக்க ஆண்குழந்தை ஒன்றின் சடலமும் அடையாளம் காண்பதற்காக விசுவமடு மகாவித்தியாலய மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன. (14)

# முச்சக்கர வண்டி சங்கத்தினர் உலர் உணவு சேகரிப்பு

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி கிளிநொச்சிப்பிரதேச முச்சக்கர வண்டி சங்கத்தினரால் பல்வேறுபட்ட கிராமங்களுக்குச் சென்று ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட உலர் உணவு உட்பட ஏனைய பொருட்களை சேகரித்து வழங்கியுள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்தும் இச் சேவையினை செய்து வருகின்றனர்.

# சமாச பணியாளர்களுக்கு அவசர அழைப்பு

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் அனைத்து பணியாளர்களையும் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கசமாசத்திற்கு வருகை தருமாறு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாச தலைவர் மதியராசா தெரிவித்துள்ளார். (20)

# அதிர்ச்சி தரும் துயரங்களால் பாதிப்புற்றோரின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முன்வருக!

## தொண்டு நிறுவனங்களுக்கு இளம்பரிதி அழைப்பு

யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம் பரிதி நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்டுள்ள விளைவுகள் பாதிக் கப்பட்ட மக்களது உடனடி நலன் சார் செயற்பாடுகள் குறித்து நிலவரங்களை விளக்கினார்.

யாழ். மருத்துவமனையில் காயமடைந்தோரைப் பராமரிக்க தொண்டர்கள் தேவை, தொண்டர்கள் நோயாளர் நலன்புரி நிலையமூடாக செயலாற்ற தொடர்பு கொள்ளலாம்.

உறவினர்களுடன் தொடர்பு கொள்ள முடியாதவர்கள் காணாமற்போனோரது தகவல் தருபவர்கள் நெல்லியடி யிலுள்ள சிறப்புக் கருமபீடத்திலும், நலன்புரி நிலைய நிர்வாகத்துடனும் தொடர்பு கொண்டு தகவல்களைப்பதிவு செய்து உதவியை நாடலாம்.

இடிபாடுகளிடையே சடலங்கள் அகப்பட்டிருக்கலாம். எனவே இடிபாடுகளை அகற்றப் பொது நிறுவனங்கள் முன்வரவேண்டும். நிதி சேகரிப்பு, பொருள் சேகரிப்பில் மக்கள் சுயமாகப் பங்களிக்கிறார்கள். இச் செயற்பாடுகள் நிறுவனமயப்படுத்தப்படல் வேண்டும். இதன் மூலம் துஷ்பிரயோகம் தடுக்கப்படும். திட்டமிடப்படாது ஒழுங்கற்ற வகையில் நலன்புரி நிலையங்களுக்கு நேரடியாக ஆர்வலர்கள் பொருட்களைக் கொண்டு கையளிப்பதைத் தவிர்க்க வேண்டும். தேவைகளுக்கேற்ப பொருட்கள் வழங்கப்பட வேண்டும்.

சமைத்த உணவுகள் வழங்குவதைத்தவிர்த்து உலர் உணவுப்பண்டங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது. ஏற்கனவே இராணுவ நடவடிக்கைகளால் பெருமளவில் பாதிப்படைந்தவர்களாகிய இம் மக்கள் இயற்கை அனர்த்தத்தால் முழுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளனர். எல்லாவற்றையுமே இழந்துவிட்டனர்.

வடமராட்சிகிழக்கு கரையோரக்கிராமங்களாகிய சுண்டிக்குளம், கட்டைக்காடு, ஆழியவளை, செம்பியன் பற்று, குடத்தனை, மணற்காடு முதலிய கிராமங்கள் முற்றாகவே அழிந்துள்ளன. சிறார்கள், குழந்தைகள் உட்பட ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 500 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாதிப்புக்குள்ளகியுள்ள மக்கள், பளை மத்திய மகா வித்தியாலயத்திலும், அதற்கு அயலிலுள்ள பாடசாலை களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அரசியல்துறையின் ஏற்பாட்டில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பராமரிப்பில் இவர்கள் பேணப்படுகின்றனர். தொண்டர்களும், போராளிகளும் பணியாற்றுகின்றனர்.

வடமராட்சியில் சிறிலங்கா இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசங்களில் கற்கோவளம், முனை, தும்பளை, சுப்பர்மடம், சக்கோட்டை இன்பருட்டிப் பகுதிகள் பலத்த சேதமடைந்து அழிந்துள்ளன. கரையோரக் கட்டடங்கள் பெரும் அலைவீச்சில் முழுமையாக இடிந்துள்ளன. கடற்றொழில் உபகரணங்கள்,வள்ளங்கள் அழிந்துள்ளன. மணற்காட்டில் 100இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். கற்கோவளம் முனை,ஆதிகோவிலடிப்பகுதிகளில் பலர் பலியாகியுள்ளனர்.

அரசியல் துறைப்பணிக் குழுவினரும், தொண்டர்களும் மீட்புப்பணிகளில் ஈடுபடுகின்றனர். இப்போதும் சடலங்கள் கரை ஒதுங்குகின்றன. உடுத்த உடையுடன் மக்கள் வெளியேறி நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளனர். வீடுகள்,கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க பணிமனைகள், பாடசாலைகள்,கோவில்கள் எனப் பல கட்டடங்கள் தகர்ந்துள்ளன.

பருத்தித்துறை செயலாளர் பிரிவில் 13 நலன்புரி நிலையங்களில் 1331 குடும்பங்களைச் சேர்ந்த 4951 பேர் வரையில் தங்கியுள்ளனர். கரவெட்டி செயலாளர் பிரிவில் 18 நலன்புரி நிலையங்களில், 6290 பேர்வரையில் தங்கியுள்ளனர். சாவகச்சேரி செயலாளர் பிரிவில் 6 நலன்புரி நிலையங்களில் வடமராட்சிப் பகுதிகளிலிருந்து 6 நலன்புரி நிலையங்களில் 506 குடும்பங்களைச் சேர்ந்த 2005 பேர்கள் தங்கியுள்ளனர். ஏனையோர் உறவினர் கள், நண்பர்கள் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களைக் கவனிப் பதற்கான திட்டங்களை வகுத்து செயற் படுத்துவதற்காக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு அருகாமை யில் பாதிக்கப்பட்ட மக்களது நலன் களைக் கவனிப்பதற்கான சிறப்புக் கருமபீடம் அமைக்கப்பட்டுள்ளது. இது அரசியல் துறையின் ஒழுங்கமைப்பில் இயங்குகிறது. இச்செயலகத்தினூடாக பொது அமைப்புக்கள் மனித நேய ஆர்வலர்களின் அனுசரணையுடன் சமைத்த உணவு கடந்த இரு நாட்களாக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் குழந்தைப்பால்மா, தேநீர், பாய், உடைகள், நுளம்புத்திரி, போர்வைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. தேவைகளைப் பூர்த்தி செய்ய வளங்கள் போதவில்லை அரச சார்பற்ற நிறுவனங்களது உதவிகள் முழுமையாக வந்து சேரவில்லை.

யு.என்.எச்.சி.ஆர். தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சில உதவிகள் கிடைத்துள்ளன. இம்மக்களுக்கு உடனடித் தேவைகள் பல உள்ளன.மிக முக்கியமாக முகாம்களில் சமையல் உபகரணங்கள், பாய், போர்வை, புதிய உடுப்புகள், சிறார் நுளம்பு வலைகள், குழந்தைகளுக்கான பால்மா, பால்புட்டிகள்,சிறுவர் மருந்துகள், விற்றமின் குளிகைகள், நுளம்புத்திரிகள்,சிறு விளக்குகள் அவசியத் தேவைகளாகும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரைந்து செயற்பட வேண்டும் பொது அமைப்புகளும் உதவ வேண்டும்.

நலன்புரி நிலையங்களில் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. சுற்றாடலைத் துப்புரவாகவும், கொதித்தாறிய நீரை மட்டும் பாவிக்க வேண்டியுள்ளது.

அதிர்ச்சி தரும் துயரங்களால் பாதிப்புற்று எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ள மக்களுக்கு எதிர்கால நம்பிக்கை ஊட்டவும், ஆறுதல் அளிக்கவும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

இவர்களது வாழ்வியல் பிரச்சினைகளை, தேவைகளை சரியாக இனங்கண்டு மதிப்பீடு செய்து செயலாற்ற அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன் வர வேண்டும். இதை அடிநாதமாகக் கொண்டு பொது அமைப்புக்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கி கூட்டுச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. இம் மக்களது எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப இக் கூட்டுச் செயலணி செம்மையாக இயங்கும் இது நீண்ட கால நோக்கைக் கொண்டிருக்கும் எனத் தெரிவித்தார். (33)

## அடையாளம் காண முடியாத சடலங்கள் அரச செலவில் அடக்கம்

யாழ்.குடாநாட்டு கடற்கரையோரங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்தோர் இன்னமும் அடையாளம் காணப்பட்டு பொறுப் பேற்கப்படாத சடலங்கள் அரச செலவில் புதைக்கப்பட்டுவருகின்றது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோரின் பெருமளவு சடலங்கள் வைத்தியசாலைகளில் குவிந்திருப்பதால் இவற்றை உரியவர்கள் வந்து அடையாளம் காணும் வரை பேணிப்பாதுகாக்க முடியாதுள்ளன. இதனைக் கருத்தில்கொண்டு நீதிபதிகளின் அனுமதியுடன் அவற்றை அரச செலவில் அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. (33)

## பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிப் பொருட்கள் சேகரிப்பு

(நல்லூர்)

வடமராட்சி மற்றும் பளைப் பகுதியில் கடல் அனர்த்தம் காரணமாக சொந்த இடங்களை இழந்து நிர்க்கதியாக வந்து தங்கியுள்ள மக்களுக்கு உணவுப் பொருட்கள், உலர் உணவுப் பொருட்கள் என்பனவற்றை சேகரிப் பதில் யாழ்குடாநாட்டின் அனைத்து, கிராமங்களின் மக்களும் மிகவும் சுறுசுறுப்பாக செயற்பட்டனர்.

சமைத்த உணவுப்பொருட்கள் மற்றும் உலர் உணவுப்பொருட் களை மக்கள் மிகவும் அக்கறை யுடன் தேடிச்சென்று வழங்கி னார்கள்.

இம்முயற்சியில் சனசமூக நிலையங்கள் மற்றும் இளைஞர் கள் செயற்பட்டு பிரதேச அரசி யல்துறைப் பணிமனைகளுக்குக் கொண்டுசென்று பொருட்களைக் கையளித்து வருகின்றனர். (41)

## படையினருக்கு சாராயம் வழங்கி மாடுகள் அபகரிப்பு

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் சுற்றுவட்டாரத்தில் உள்ள இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களின் நூற்றுக்கணக்கான மாடுகளை சிலர் இராணுவத்தின் துணையோடு சாராயப்போத்தல்களை இராணுவத்திற்கு வழங்கி அவர்கள் துணையோடு மாடுகளை பிடித்து இறைச்சியாக்கி வெளியிடங்களுக்கு விற்க எடுத்துச்செல்வதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

படையினர் அனுமதியின்றி பிரவேசிக்கமுடியாத பகுதிகளில் தங்கியுள்ள மாடுகளை இரவு வேளைகளில் ரோச் வெளிச்சத்தில் சிலர் தேடிச்செல்வதும் மாடுகள் கூட்டமாய் வெருண்டோடும் சத்தங்கள் இப்பிரதேச மக்களால் அவதானிக்கப்பட்டு வருவதாகவும் இராணுவ சம்மதம் இன்றி இப்பகுதியில் பிரவேசிக்கமுடியாது என்பதால் இரவு வேளைகளில் காவலரண்களில் நிற்கும் இராணுவத்திற்கு இக்குழுக்கள் மதுவை வழங்கி மாடுகளை பாதுகாப்பு வலயப்பகுதியில் வைத்து வெட்டி பிற இடங்களுக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

## கடல் கொந்தளிப்பால் உயிரிழந்தவர்களின் மரண சான்றிதழ்களை வழங்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

கடல் கொந்தளிப்பால் இறந்த வர்களின் இறப்பை மரண விசா ரணை அறிக்கை கிடைத்தவுடன் பதிவு செய்து, சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு எல்லா வைத்தியப்பதிவாளர்களையும், பிறப்பு, இறப்பு பதிவாளர்களையும் பதிவாளர் நாயகம் கேட்டுக்கொண் டுள்ளார்.

அவ்வாறே கடல் கொந்தளிப்பி னால் ஏற்பட்ட இத்தவிர்க்க முடியாமற்போன சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட இறப்புக்குரிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் தேசிய மட்டத்தில் மிகவும் முக்கியமான தொன்றாதலால் அந்த இறப்புக்களுக்கான காரணத்தைக் குறிப்பிடும் போது கடல் கொந்தளிப்பால் ஏற்பட்ட மரணம் என சரியாகக் குறிப்பிடுமாறும் பதிவாளர் நாயகம் கேட்டுக்கொண் டுள்ளார்.

இவ்விறப்புக்களைப் பதிவு செய்வதற்கு இரவு பகல் பாராது நடவடிக்கை எடுக்கும்படியும், ஏதாவது பிரச்சினைகள் ஏற்படின், கொழும்பு பிரதான அலுவலகம் 2393073, 2393071 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் அல்லது வடக்கு, கிழக்கு உதவிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐய ருடன் 021-222 2475 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் மேலும் தெரி வித்துள்ளார். (33)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு

## களஞ்சியங்களிலிருக்கும் கோதுமை மாவில் பாண் தயாரித்து வழங்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கரை யோரப்பிரதேசங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள மக்கள் தற்காலிகமாக குடியேறியுள்ள பகுதிகளில் கோதுமை மா மற்றும மண்ணெய் ஆகியவற்றிற்கு பெருந் தட்டுப்பாடு நிலவிவருகிறது.

இதனால் இடம் பெயர்ந்த மக்கள தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பெரும் அல்லற்பட்டு வருகின்றனர். இதே வேளை யாழ்.குடாநாட்டி லிருக் கும் அரச கோதுமை மா களஞ்சி யங்களிலிருக்கும் மாவை பெற்று அகதிமுகாம் மக்களின் உணவுத் தேவைகளுக்கான பாண்களை தயாரித்து பகிர்ந்தளிக்கும் படி யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் பணித்துள்ளார். (33)

## அம்பாறையில் இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்தோர் தொகை 8,000 ஆக உயர்வு!

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு அனர்த தத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

நேற்றிரவு வரை 6,720 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இங்கு அதிகரித்த வண்ணமேயுள்ளதாக அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப் பாளர் குயிலின்பன் சற்றுமுன் எமக்குத் தெரிவித்தார். அத்துடன் இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசின் நிவாரணங்கள் எதுவும் கிடைக்காத நிலையில் மக்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருவதாகவும், அவர்களுக்கு உடனடியாக உதவிகளை வழங்கு மாறும் குயிலின்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அம்பாறை மாவட்ட த் தளபதி ராம் தலை மையில் மீட்பு மற்றும் உதவிப் பணிக ளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. மக்களுக்கு உதவுவது குறித்து தளபதி ராம், அவசர கூட்டம் ஒன்றினை நேற்று முன்தினம் சிறிலங்கா சிறப்பு அதிர டிப் படையினருடன் நடத்தியுள்ளார்.

# மட்டு.மாவட்டத்தில் விளைவித்த கோரம்


அள்ளப்பட்ட வீதி


போர்த்தி விடப்பட்ட சடலம்


புதைகுழி தோண்டும் இயந்திரம்


மீட்கப்பட்டோர்


இடிந்துவிழுந்த கோவில் மண்டபம்


குழந்தையின் சடலம்


சிகிச்சை அளிக்கும் போராளிகள்


சாய்ந்து கிடக்கும் கோபுரம்

# கிழக்கு மாகாணத்தில் துரித பணிகளுக்கு த.பு.கழகம் தொண்டர்களைக் கோருகிறது

கிழக்கு மாகாணத்தில் துரித மீட்புப் பணிகளை மேற்கொள்ள மேலதிக தொண்டர்களை இணையுமாறு அவசர வேண்டுகோள் ஒன்றைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் கடற்கொந்தளிப்பு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட நூற்றிற்கு மேற்பட்ட கரையோரக் கிராமங்களில் துரித மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மிக மோசமான பாதிப்புக்குள்ளாகியுள்ள இப்பகுதிகளில் சுமார் 7,000 பொதுமக்கள் இன்னமும் கண்டு பிடிக்கப்படாததால் அவர்களை மீட்கும் பணிகள் அவசர பணிகளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதே வேளையில் இந்தப் பகுதிகளில் பல்லாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து இன்னமும் அவசர மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் அவதியுற்று வருகின்றனர் என அப்பகுதி புனர்வாழ்வுக் கழக பணியகங்கள் அறிவித்துள்ளன. தற்போது அம்பாறை மாவட்டத்தில் வாகனப் போக்குவரத்துக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் படகுகள் மூலமே உடனடி உதவிகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. இது இப்பணிகளை மேலும் தாமதப்படுத்தி வருகின்றது. இப்பணிகளினை ஒருங்கிணைத்து மேற்கொண்டு வரும் அம் மாவட்ட புனர்வாழ்வுக் கழகத்தினர், உடனடித் தேவைகளுக்காக உணவு மற்றும் மருத்துவப் பொருட்களை கொழும்பு மற்றும் பிற பகுதிகளிலிருந்து அப்பகுதிகளிற்கு அனுப்பி வருகின்றனர். அத்துடன் வன்னி மற்றும் மன்னார் பகுதிகளிலிருந்து சுமார் 300 தொண்டர்கள் 10 பாரவூர்திகளில் உணவுப் பொருட்களுடன் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் அவசர மனிதாபிமான பணிகளுக்காக சென்றுகொண்டிருக்கின்றனர். மேலும், இப் பணிகளில் ஈடுபட முன்வரும் தொண்டர்களை உடனடியாக அங்கு சென்று இணையுமாறு புனர்வாழ்வுக் கழகம் கோரியுள்ளது. தமது மட்டக்களப்பு பணிமனையினை 00 94652225399 எனும் தொலைபேசி இலக்கங்களூடாகவும், அம்பாறை மாவட்டத்தினை 0094672279050 எனும் தொலைபேசி ஊடாகவும் தொடர்பு கொள்ளுமாறு புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி நேற்று விடுத்த அவசர வேண்டுதலில் கோரியுள்ளார். இதேவேளையில் பயிற்றப்பட்ட வைத்தியர்கள், தாதிகள் மற்றும் மருத்துவத் தொண்டர்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கோரியுள்ளது. இந்த அழைப்பை ஏற்று பணியாற்ற வரும் முன்வரும் தொண்டர்களை உடனடியாகத் தமது அனைத்துலகக் கிளைகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மீட்பு மற்றும் மனிதாபிமானப் பணிகளிற்கு அனைத்துத் தரப்பினரையும் ஒத்துழைப்புத் தருமாறு புனர்வாழ்வுக்கழகம் கேட்டுள்ளது. குறிப்பாக, நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட இடங்களிற்கு உரிய காலத்தில் துரிதமாகச் சென்றடைவதற்கு சிறிலங்கா அரசு மற்றும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் தனியார் பொதுநிறுவனங்கள் உதவிடல் வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. நேற்றைய தினம் திருமலைக்கு சென்றுகொண்டிருந்த நிவாரணப் பொருட்கள் அடங்கிய பாரவூர்திகள் ஹபரணைப் பகுதியில் சில இடையூறுகள் ஏற்பட்டமை தமக்கு வேதனையை ஏற்படுத்தியுள்ளதாகத் தொண்டர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது வடக்குக்கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள பேரழிவின் தாக்கங்களைப் பார்வையிடவும், இடம்பெறும் புனர்வாழ்வுப் பணிகளை கண்காணிப்பதற்காகவும் அனைத்துலக ஊடகவியலாளர்களை பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கு அழைத்துச் செல்ல புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. நேற்று 29.12.04 புனர்வாழ்வுக் கழக கொழும்பு பணிமனை இதற்கான ஏற்பாட்டினை ஆரம்பித்துள்ளது. இந்தப் பயணங்களில் பங்கேற்க விரும்பும் ஊடகவியலாளர்களைத் தமது கொழும்புப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறும் புனர்வாழ்வுக்கழகம் கோரியுள்ளது.

# முல்லையில் இடம்பெயர்ந்தோர் 10 நிலையங்களில் 1200 குடும்பங்கள்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவுப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடற் கொந்தளிப்பு அனர்த்தத்தால் உயிர்தப்பி உடமைகள் இழந்த நிலையில் பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் தங்கியுள்ள மக்களின் அண்ணளவான விபரம் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேற்படி தரவுகள் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மேரி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். இதன்படி இத்தரவுகள் யாவும் உடனடியாக அரசாங்கத்திற்கு ஒரு விபரத்தை அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்டதனால் குறிப்பிட்டு இவ்வளவு என்று கூறமுடியாது. அதனால் அண்ணளவான தரவுகளைப் பெற்றுள்ளோம்


| நலன்புரி நிலையங்கள் | குடும்பங்கள் | அங்கத்தவர்கள் | கிராம சேவகர் பிரிவு |
|---|---|---|---|
| மு/புதுக்குடியிருப்பு ம.வி | 202 | 824 | K.T.சிவராஜா |
| மு/இரணைப்பாலை ம.வி | 282 | 1310 | V.கனகசுந்தரம்சுவாமி |
| மு/அரசரட்ணம்வித் | 34 | 106 | S.கந்தசாமி |
| மு/விசுவமடு ம.வி | 32 | 91 | E.தேவகி |
| மு/சுதந்திரபுரம் அ.த.க | 18 | 74 | P.சுந்தரலிங்கம் |
| மு/விக்கினேஸ்வரா வித் | 85 | 342 | T.தர்மராசா |
| மு/வேணாவில் அ.த.க. | 96 | 380 | S.சுப்பிரமணியம் |
| மு/கணேசா வித்தி. | 80 | 352 | T.ஜெயதாஸ் |
| மு/உடையார்கட்டு ம.வி | 274 | 1014 | S.செல்வவிநாயகம் |
| | 1103 | 4493 | |

அந்த அடிப்படையில் முள்ளியவளைப் பகுதியில் ஒன்பது நலன்புரி நிலையங்களில் 11000இற்கும் மேற்பட்டோர் தங்கியுள்ளனர். ஒட்டுசுட்டானில் ஒரு நலன்புரி நிலையத்தில் 120 பேர்வரை உள்ளனர்.

இதேபோல் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் தயாரித்த தரவுகளின் ஓரளவு விபரம் பெறப்பட்டுள்ளது. அதன்படி நலன்புரி நிலையம், அங்குள்ள குடும்பம், அங்கத்தவர்கள் தங்கியுள்ள கிராமசேவகர் பிரிவு என்பன கிடைக்கப்பெற்றுள்ளன.

நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்போர் விபரம். குடும்பம்-985, அங்கத்தவர்கள்-3162.

அத்துடன் இன்று முதல் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனை வழமை போல் செயற்படும் எனவும் தெரிவித்துள்ளார். (கு,ச)



தீயூட்டப்படும் சடலங்கள்

# முல்லைக் கரையோரத்தில் தற்காலிக வீதி அமைப்பு!

(அலுவலக செய்தியாளர்)

இயற்கையின் அனர்த்தத்தால் முற்றாகச் செயலிழந்து பாவிக்க முடியாது உள்ள முல்லைத்தீவு கடற்கரை வீதிக்குப் பதிலாக அதற்கு அண்மையாக ஒரு தற்காலிக பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகர்ப் பகுதிகளுக்குள் உள்ள ஏனைய வீதிகள் ஓரளவுக்குப் பாவிக்க முடிந்தாலும், இந்தக் கடற்கரை வீதி முற்றாக சேதமடைந்து பாவிக்க முடியாது உள்ளதுடன் சில இடங்களில் நீண்ட தூரத்திற்கு வீதியே இல்லாமல் உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு அங்குள்ள எஞ்சியுள்ள பொருட்களை மக்கள் மீட்டெடுத்துச் செல்வதற்கு வசதியாகவே இவ்வீதி அமைக்கப்பட்டுள்ளது.

இதனை புல்டோசர் மூலம் கட்டடங்களின் சிதைவுகளை அகற்றி ஒரு தற்காலிக வீதியாக அமைக்கப்பட்டு மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

தொடர்ந்தும் மக்கள் தமது எஞ்சிய பொருட்களை மீட்டெடுத்து வருகின்றனர்.

அத்துடன் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்த முள்ளிவாய்க் கால் மக்களும், அதனை அண்டிய பகுதி மக்களும் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத திரும்பியுள்ளனர்.



அனர்த்தத்தின்பின் முல்லை நகரின் ஒரு பகுதி



செப்பனிடப்படும் வீதி

# விடுதலைப் புலிகளின் துறைசார் பிரிவுகளே பெரும்பாலான உதவிகளை வழங்குகின்றன

## முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவுப் பகுதியில் [illegible] இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு துறைசார்ந்த பிரிவுகளும் இது வரை தமது முழுமையான பங்களிப்பை மேற்கொண்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் தெரிவித்துள்ளார்.


மேற்படி நலன்புரி நிலை யங்களில் வாழும் மக்களுக்குரிய அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடிநீர் வசதிகளையும், மலசலகூட வசதிகளையும் தமிழீழ நிர்வாக சேவையினர் தொடர்ந்து வழங்கி வருகின்றனர்.

அடுத்து ஒவ்வொரு நலன்புரி நிலையத்திலும் வைத்து சமைத்த உணவுகளை மூன்றுவேளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கிவருகின்றது.

அடுத்த அடிப்படைத் தேவையான மருத்துவ வசதியினை தமிழீழ சுகாதார சேவைகளும், திலீபன் மருத்துவ சேவை நிலையத்தினரும் வழங்கி வருகின்றனர். இவர்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள், மற்றும் வைத்திய நிபுணர்கள் ,வவுனியா சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏனைய சில வைத்தியர்கள் ஆகியோர் கடமையாற்றி வருகின்றனர்.

அத்துடன் பொதுமக்கள் தம்மால் இயன்றளவு அனைத்து உதவிகளையும், மனித வலுவுடனான பங்களிப்பையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று தண்ணீரூற்று வித்தியானந்தாக் கல்லூரியில் உறவுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்று இயங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனை விரைவில் பூர்த்தி செய்து மக்களின் தொடர்புகளை உடனுக்குடன் அறிவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் தமது இடங்களுக்கு திரும்பிச் செல்லும் வரை அவர்களுக்குரிய உணவு வகைகளை வழங்குவதில் தாம் தொடர்ந்தும் ஈடுபடுவதாக தமிழர் புனர் வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது. (கு.ச)



தொழில் உபகரணங்களை மீட்கும் மீனவர்

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயன்றதைச் செய்தேன்

## பாராளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவுப் பகுதியில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னால் இயன்ற பணிகளை மேற்கொண்டு வந்துள்ளேன். இன்னும் தொடர்ந்து, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மிகவும் கடுமையான பணிகளை மேற்கொண்டுவருவதாகவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.


அவர் தொடர்ந்து வெள்ள அனர்த்தம் பற்றிக் குறிப்பிடுகையில் தான் அப்பகுதியில் சம்பவதினம் நின்றதனால் உடனடியாகவே சென்று அங்கு நடந்த அனர்த்தத்தைப் பார்த்து அங்கு காயப்பட்ட மக்களை மீட்டு வைத்தியசாலைகளுக்கு அனுப்புவதிலும், இறந்த சடலங்களை மீட்டெடுக்கும் பணியிலும் தான் கலந்துகொண்டு செயற்பட்டதாகத் தெரிவித்தார்.

மேலும் இந்த அரசாங்கம் எங்களுக்கு உதவிகளைச் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி; வரும் நாட்களில் பாராளுமன்றத்தில் கூட்டமைப்பினர் அனைவரும் சேர்ந்து ஒரு வேண்டுகோளை விடுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினம் முல்லைத்தீவில் நடந்த கோரத்தையும் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களையும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் மற்றும் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் ஆகிய இருவரும் சென்று பார்வையிட்டுள்ளனர். (கு.ச)

## முல்லைத்தீவில் மீட்புப்பணி







முன்னிலைவகை செயலணிக் குழுக்கூட்டம்

(படங்கள்:கலாவரன்,சசிக்குமார்)

## வடமராட்சி கிழக்கில் நிவாரணப்பணி







புதுக்காட்டுச் சந்தியில் செயலணிக்குழு சந்திப்பு

(படங்கள்:லோகீசன், பிரதீபன்)

# யாழ்.குடாநாட்டிலுள்ள மக்கள் உதவிப் பொருட்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கடற்கொந்தளிப்பு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்கள் பெருமளவான உதவிப் பொருட்களை புதுக்காட்டுச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள செயலணிக்குழுவிடம் கையளித்து வருகின்றனர்.

பெரும் பாதிப்புக்குள்ளாகி முகாம்களில் தங்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு வழங்கும் முகமாக தம்மால் இயன்றளவு பொருட்களை வழங்கி வருகின்றனர். மக்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், பாய்கள், நிலவிரிப்புகள், பிளாஸ்டிக் வாளிகள், பால்மா வகைகள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள் மற்றும் சத்துணவுகள், மரக்கறிகள், சமையல் உபகரணங்கள், குழந்தைகளுக்கான உணவுப் பொருட்கள், போர்வைகள், பனடோல், ஓடிக்கொலோன் ,சவர்க்காரங்கள், உணவு அருந்தும் கோப்பைகள் எனப் பெருமளவான பொருட்களை வழங்கி வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளைச் சேர்ந்த மக்களும் ஒன்றிணைந்து கிராமம் கிராமமாக சேகரிக்கப்பட்ட பொருட்களைப் பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளிப்பதற்காக புதுக்காட்டுச் சந்தி செயலணிக்குழுவிடம் கையளித்துள்ளனர். (லோ,தீ)


## முக்கிய அறிவித்தல்

### வருடாந்த பொதுக் கூட்டம் பிற்போடுதல்

எதிர்வரும் 2004.12.30ஆம் நாள் வியாழக்கிழமை நடைபெறவிருந்த வடபிராந்திய பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ள தென்பதை உரிமையாளர்கள், நெறியாளர்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் அறியத்தருவதோடு கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் பத்திரிகை மூலம் அறியத் தரப்படும் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

சி.பாஸ்கரன்
தலைவர்,
வ.பி.பா.ஊ.உ.கூ.ச.
பரந்தன்.

க.சி.மலரியம்
செயலாளர்,
வ.பி.பா.ஊ.உ.கூ.ச.
பரந்தன்.

(சி-10996)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் அதன் கடல்வள அபிவிருத்தி நிலையமூடாக தமிழ்மொழி மூலம் நடாத்தும் இரண்டு ஆண்டுகால மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை 15.02.2005 அன்று தொடங்கி இரண்டு கல்வியாண்டுகள் நடைபெறும். இக்கற்கை நெறிக்கு பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிவாய்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு உளச்சார்பு பரீட்சை மூலமும், நேர்காணல் மூலமும் திறமையடிப்படையில் அமையும்.

| | | |
|---|---|---|
| கட்டண விபரம்: | பதிவுக்கட்டணம் ரூபா | 1,000/- |
| | கற்கை நெறிக்கட்டணம் ரூபா | 30,000/ |
| | மீளப்பெறக்கூடிய வைப்பு ரூபா | 1,000/- |

கற்கைநெறிக் கட்டணம் முழுமையாக அல்லது இரண்டு தவணைகளில்-பதிவு மேற்கொள்ளும் பொழுது இருபத்தியிரண்டாயிரம் ரூபாவும்-இரண்டாம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்பு பத்தாயிரம் ரூபாவுமாக-செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளுக்குமான உதவிப்பதிவாளர் பிரிவில் 50/-கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் உதவிப்பதிவாளர், விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு 20.01.2005 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

துணைவேந்தர்

(சி.11162)



## பண்டிகைக் கால பரிசு மழை!




● முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்
மற்றும் 20கிராம், 10கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக்குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப்பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கீகாரம் பெற்ற MMBL உப முகவர்கள் ஊடாகப் பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!

விபரங்களுக்கு MMBL முகவரைத் தொடர்பு கொள்ளுங்கள் 011-2[illegible]2333

ரூபாய் 250,000 இற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்

AUTHORISED AGENT

WESTERN UNION
பணப்பரிமாற்றம்
நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்
இச்சலுகை டிசம்பர் 2004, ஜனவரி 2005 மாதங்களில் பணப்பரிமாற்றம் செய்பவர்களுக்கு மட்டும்!

MMBL
Money Transfer(PVT) LTD
300,Galle Road, Colombo-03
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)
அநேகமான கிளைகள் 365 நாட்களும் திறந்திருக்கும்

(சி-11115)

# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் சமூகசேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு.நடராசா தசரதராஜகுமாரன் அவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு கள்ளப்பாடு கடற்கரைப்பிரதேசத்தில் 26.12.2004 இல் இடம்பெற்ற கடல் அனர்த்தத்தில் உயிரிழந்தனர்.

அவரின் தாயார் நடராசா அன்னலட்சுமி
சகோதரிகள் குமுதம்மா, சகுந்தலாதேவி, அருணதயா
மருமக்கள் ஜெயராஜ்,தர்மினி,நிக்சன்,அனிதா. அருண், பௌத்திரா, அபிநிசா.

ஆகியோர் உட்பட அவரது குடும்பத்தைச் சேர்ந்த 17 பேர் உயிரிழந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது துன்பத்தில் நாங்களும் பங்குகொண்டு இவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (5509)

தகவல்:
பிரதேச செயலர்.பணிமனை உத்தியோகத்தர்கள்.
கிராமஉத்தியோகத்தர்கள்.வெளிக்கள உத்தியோகத்தர்கள்.

பிரதேச செயலகம்,
கண்டாவளை

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
1974 12 02

தாயக மண்ணில்
1999 12 26

**வீரவேங்கை மதிகுமன்**
**முத்துராசா தங்கேஸ்வரன்**
(65 வீட்டுத்திட்டம் முட்கொம்பன்-பூநகரி)

தாய்மண்ணினை மீட்பதற்காய்
தாய்மடியில் அவதரித்தவனே
மதி நீ மறைந்து ஆண்டுகள்
ஐந்து கடந்தாலும் எம்மனதிலும்
மண்ணிலும் அழியாது உன் நாமம்.

தகவல்
மனைவி சுதா (5507)

தந்தை, தாய், சகோதரங்கள், மனைவி, பிள்ளைகள், மாமன், மாமி, மச்சான்-மச்சாள்மார், உறவினர்கள்.

# சாவு அறிவித்தல்



**தில்லைக்கண்ணு குணராசா**

பதுளையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி இரத்தினபுரம்-இல:521 ஐ நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைக்கண்ணு-குணராசா 28.12.2004 காலமாகிவிட்டார். அவர் காலம் சென்ற தில்லைக் கண்ணு சிறீரங்கத்தின் பாசம் உள்ள மகனும், சிவ நாயகி, ஆறுமுகம், இலட்சுமணன் பாலகிருஸ்ணன், பன்னீர்ச்செல்வம் சீதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், மனோச்சித்திரா, கவிராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமமக்கிரியை இவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 30.12.2004 இன்று 3.00 மணிக்கு திருநகர் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
மகன்

(5506)

## பூகம்பத்தின் தீவிரம் குறைகிறது அவதான நிலையம் தகவல்

(புதுடில்லி)

"இந்தோனேசியாவில் ஏற்பட்ட பூகம்பத்தின் தீவிரம் படிப்படியாக குறைந்து கொண்டிருக்கிறது"என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இந்திய வானிலை ஆய்வு மையத்தில் பூகம்பப் பிரிவும் உள்ளது. இதன் தலைவர் சுக்லா,டில்லியில் நேற்று அளித்த பேட்டியில் "இந்தோனேசியாவில் கடந்த ஞாயிறன்று 8.9 ரிக்டர் அளவில் பதிவான பூகம்பத்தின் தீவிரம் படிப்படியாக குறைந்து கொண்டிருக்கிறது. பூகம்பத்துக்கு பின் ஏற்படக் கூடிய நில நடுக்கம் தொடர்கின்றது. இதுவரை அது போன்று 30 அதிர்வுகள் பதிவாகியுள்ளன. மும்பை போன்ற நகரங்களை நாசப்படுத்தக் கூடிய அளவுக்கு அரபிக் கடலில் சுனாமி அலை தாக்குதல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு" என்றார்.

## நிவாரணம் வழங்க பா.ஜ.குழு அமைப்பு

'தென்மாநிலங்களில் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ பேரழிவு நிவாரண நிதி'யத்தை பா.ஜ. ஏற்படுத்தியுள்ளது. கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வது குறித்து ஆலோசிக்க முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் பா.ஜ.அவசர கூட்டம் டில்லியில் நேற்று முன்தினம் நடந்தது. பா.ஜ.தலைவர் அத்வானியும், முன்னாள் தலைவர் வெங்கையா நாயுடுவும் ஏற்கனவே பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர். எனவே இந்தக் கூட்டத்தில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. டில்லியில் வாஜ்பாய் வீட்டில் நடந்த இந்தக் கூட்டத்தில் கட்சியின் மூத்த தலைவர்கள் ஜஸ்வந்த்சிங், சிவராஜ்சிங் சவுகான், முக்தார். அப்பாஸ் நக்வி ஆகியோர் கலந்து கொண்டனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் செய்ய வேண்டிய உதவிகள் குறித்து இவர்கள் விரிவாக விவாதித்தனர்.

# கண்ணீர் அஞ்சலி



அமரர் திருமதி
**ஞானகுமார் (பவுணன்)**
**புஸ்பலதா (குலவதி)**

மலர்வு:- 1974.12.22
உதிர்வு:- 2004.12.26

செந்தமிழீழத்தில் இருந்து பாசத்தை
மனதில் நிரையாய் கோர்த்து
தமிழீழத்துக்குப் பாச உறவுகளை
பார்ப்பதற்கு வந்து உன்
உறவுகளைப் பார்த்து விட்டு - உன்
சிரித்த புன்சிரிப்புகளை கணவன் சகோதரர்களோடு பகிர்ந்தாய்.
உன் பேச்சுக்களைக் கேட்டுப் பரிதவித்த
உன் அம்மா உன்னைப் பொறுக்க
முடியாத பாசவலையுடன் இணைத்து
ஒரு நீண்ட அலை வேகத்துடன்
சேர்ந்து கட்டி அணைத்தாரோ..
உன் அம்மா வழிக்கு
சென்று விட்டாயோ
இனி எப்போ உன் இனிய
பேச்சை நாம் கேட்போம்.

அன்றைய தினம் இவர்களுடன் காவியமானவர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

கணவன் :-பவுணன்
தகப்பன் :-வடிவழகன்.
தாய் :-புஸ்பராணி (அமரர்)
சகோதரர் :-ராஜன், சுதன்.

நிரந்தரமுகவரி:-
நாவலடி ஒழுங்கை,
மயிலிட்டி,
காங்கேசன்துறை. (5511)

தற்போதைய முகவரி:-
வத்திராயன் வடக்கு,
தாளையடி.

# பதவி வெற்றிடம்

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடம் நிரப்புவதற்காக தகைமை உள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரிக்கப்பட்டதாகவும், சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். "விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், பூநகரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், நாகதேவன் துறைவீதி, வாடியடி, பூநகரி" எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ நேரடியாகவோ 14.01.2005ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

* பதவி:- வர்த்தக முகாமையாளர் 106/08

* சம்பள அளவுத்திட்டம்:-5250-10/120-10/130-7750
..........................................
63000-10/1440-10/1560=93000

* சுற்றுநிருபங்கள்படி விதிக்கும் ஏனைய படிகள் யாவும் வழங்கப்படும்.

* வயதெல்லை:-18-45 வருடங்கள்
(சேவையில் உள்ளோருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

* கல்வித்தகைமை:- (அ) முகாமை மட்டப்பதவியில் அல்லது அத்தகைய மேற்பார்வைத் தரப்பதவியில் குறித்த துறையில் கூட்டுறவுப்பணியாளர் 9 ஆவது சம்பளத்திட்டத்தில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் பத்தாவது சம்பளத்திட்டத்தில் மேற்கூறியவாறு 6வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது முகாமைத்தரப்பதவியில் இதற்குச் சமனான பதவியுடன் 4 வருடகால அனுபவம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் வழங்கல், பொருள் பங்கீடு/பொருள் ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றில் ஒன்றிலேனும் பெற்றிருத்தல்

அல்லது

(இ) கூட்டுறவுப்பணியாளர் (உயர்) தரம் சான்றிதழ்/க.பொ.த (உயர்)தரம் மூன்று பாட சித்தியுடன் முகாமைத்தரப் பதவி ஒன்றில் ஆறு வருடத்திற்குக் குறையாத அனுபவத்தினை அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் சந்தைப்படுத்தல்/விநியோகம், பொருள்பங்கீடு, பொருள் இறக்குமதி, ஏற்றுமதி ஆகியவற்றில் ஒன்றிலேனும் பெற்றிருத்தல்.

(ஈ)ஆண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(சி.11000)

கா.கார்த்திகேசு,
தலைவர்,
பூநகரி ப.நோ.கூட்டுறவு சங்கம்

# பாதிக்கப்பட்டோருக்கு புழுத்துப் போன அரிசியும் வேகாத பாணும் கொடுத்த படையினர்

## மீளவும் உதவி அ.அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது

வறணி மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள • பாதிக்கப்பட்ட மக்களுக்கு புழுத்துப் போன அரிசியையும்,வேகாத பாணையும் கொடுத்து சிறிலங்காப் படையினர் வீடியோப்படம் பிடித்துச் சென்றுள்ளனர். பாதிக்கப்பட்டு கண்ணீருடன் வாழும் மக்களை இழிவு செய்வதாகவுள்ளதென தென்மராட்சிக்கோட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் ஈஸ்வரன் தெரிவித்தார்.

படையினரால் வழங்கப்பட்ட பதினைந்து மூடை புழுத்துப் போன பாவனைக்கு உதவாத அரிசி மூடைகளையும், வேகாத 300 இறாத்தல்பாணையும் உடனடியாகக் காலை ஒன்பது மணியளவில் தென்மராட்சிப்பிரதேச செயலாளர் சீனிவாசன் அவர்களிடம், தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் அவர்கள் ஒப்படைத்தார்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், மற்றும் கஜேந்திரகுமார் உடன் இருந்தனர் இதுகுறித்துக்கருத்துத் தெரிவித்த ரவிராஜ் அவர்கள் துயருற்றுள்ள எமது மக்களை இழிவு செய்யும் விதமாய் நடந்துள்ளதுடன் உண்ண முடியாதெனக்கொட்டப்பட வேண்டிய அரிசியை இங் குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுத்ததன் மூலம் நாகரிகம் அற்ற நடைமுறைகளைப்படையினர் பின்பற்றியுள்ளதுடன் இவற்றை தென் இலங்கையிலுள்ள சிங்கள மக்களே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் எனஅவர் தெரிவித்தார். (28)

# கடற்கொந்தளிப்பால் பலியான 100 வெளிநாட்டவர்களின் உடல்கள் மீட்பு

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பால் பலியான வெளிநாட்டவர்களின் நூறு உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ள போதிலும் அவற்றில் பதினாறு உடல்களே அடையாளம் காணப்பட்டுள்ளன.

இச் சடலங்களில் பதினாறு சடலங்கள் கொழும்பு தேசிய மருத்துவ மனையிலும் நான்கு பேரின் சடலங்கள் கலுபோவில வைத்திய சாலையிலும் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் இனங்காணப்பட் சடலங்களை அந்தந்த நாட்டு தூதரகங்களுடன் இணைந்து அவற்றை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் சமைத்த உணவு வழங்கல்

(உடையார் கட்டு)

யாழ்.பல்கலைகழக மாணவர்களால் நேற்று முன்தினம் மாலை 7.00 மணியளவில் முல்லை மாவட்ட கரையோரப் பகுதிகளில் கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமைத்து உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.சுமார் 4000 சமைத்த உணவுப் பொதிகள் புதுக்குடியிருப்புப் பகுதிபாடசாலைகளில்தங்கியுள்ள மக்களுக்குவழங்கப்பட்டது. (19)

# செஞ்சிலுவைச்சங்கத் தொண்டர்களை இன்று தொடர்பு கொள்ளக் கோரல்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் ஏற்கனவே முதலுதவிப் பயிற்சி, மற்றும் பாதிப்புற்றோர் மதிப்பீட்டு பயிற்சிகள் போன்றவற்றில் பயிற்சிபெற்ற தொண்டர்களையும் இன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி செஞ்சிலுவைச்சங்க செயலகத்துடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் சங்கசெயலர் க.கணேஸ் வேண்டியுள்ளார்.

அத்துடன் பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரணப் பணிகள் தொடர்பான ஒழுங்கமைப்புக்களை மேற்கொள்ளும் முகமாக இன்று காலை 9.00 மணிக்கு நிறுவனத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் சகல சங்கத் தொண்டர்களையும் தவறாது சமுகமளிக்கும்படியும் சங்கச் செயலர் வேண்டியுள்ளார். (சோ)

# வடமராட்சி கிழக்கு, பூநகரி பகுதிகளைச் சேர்ந்த 22 ஆயிரத்து 353 பேர் நலன்புரிநிலையங்களில்

(அலுவலக செய்தியாளர்)

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு, பூநகரி பிரதேசப் பகுதிகளைச் சேர்ந்த 22353 இற்கும் அதிகமான மக்கள் தமது இடம்பெயர்ந்து நலன் புரிநிலையங்களில் தங்கியுள்ளனர் என கிளி.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான உதவிகளை ஒழுங்குபடுத்தி வழங்கும் புதுக்காட்டுச் சந்தி செயலணிக்குழு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஏற்பட்ட கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் 18 இற்கும் மேற்பட்ட நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு தங்கவைக்கப்பட்டிருக்கும் மக்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. காணாமல் போனவர்கள், தமது உறவுகளை அடக்கம் செய்தவர்கள், உறவைத்தேடி அலைந்தவர்கள் எனப் பெருமளவான மக்கள் இப்போதும் வந்து நலன்புரிநிலையங்களில் இணைந்து கொண்டிருக்கிறார்கள்.

நேற்றுமாலைய கணக்கெடுப்பின்படி பளை மகாவித்தியாலயத்தில் 5800 பேரும் புலோப்பளை பாடசாலையில் 3210 பேரும்,சேரன்பற்று பாடசாலையில்,420 பேரும்,கிளி.கனிஸ்ராவில் 421 பேரும்,கிளி.மத்திய கல்லூரியில் 320 பேரும்,இயக்கச்சி பாடசாலையில் 410பேரும், கோவில் வயல் பாடசாலையில் 430 பேரும்,மாசர் பாடசாலையில் 810 பேரும்,தர்மபுரம் பாடசாலையில் 380பேரும்,விசுவமடு மகாவித்தியாலயத்தில் 300பேரும், பூநகரிப்பகுதியில் 12 நலன் புரிநிலையங்களில் 9752 பேருமாக 22353 இற்கும் அதிகமானவர்கள் நலன் புரிநிலையங்களில் தங்கியிருக்கிறார்கள். என புதுக்காட்டுச் சந்தியில் உள்ள செயலணிக் குழுவின் செயலகத்தின் இறுதிப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (லோ)

# தர்மபுரம் மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவோர் விபரம்

சுண்டிக்குளம் பகுதியில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு காயமடைந்து தர்மபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர் பெயர் விபரம் வருமாறு, சசிக்குமார் சசிகலா (வயது 25) உடுத்துறை, சந்தனம் பற்றிமா (வயது 45) சுண்டிக்குளம், அந்தோனிப்பிள்ளை அத்தநாசினி அம்மா (வயது 45) , மகள் மேரிறோயினி (வயது 15), மகன் ஜீவராஜ் (வயது 10), மகன் சுகன்ஜா (வயது 12) சுண்டிக்குளம், சூரியகுமார் மொறிசினி (வயது 2) சுண்டிக்குளம், சுந்தரமூர்த்தி யாழினி (வயது1) சுண்டிக்குளம், செழின் அம்மா (வயது 50) சுண்டிக்குளம், அ.மனோகரசீலன் (வயது 51) சுண்டிக்குளம், து.யோகேஸ்வரன் (வயது 23) தாளையடி, ம.அந்தோனிப்பிள்ளை (வயது 74) சுண்டிக்குளம், அ.சதாசிவம் (வயது 26) சுண்டிக்குளம் (14).

## சமுகம் தரவும்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பயிற்சி பெறுகின்ற பட்டதாரிப் பயிலுனர்கள் அனைவரையும் இன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்குத் தவறாது சமுக மளிக்கும் வண்ணம் பயிற்சி இணைப்பாளர் வேண்டியுள்ளார். (சோ)

## தொடர்பு கொள்ளவும்

(அலுவலக செய்தியாளர்)

கனடாவில் வதியும் அன்ரனி வில்வராசா என்பவர் முல்லைத் தீவு செல்வபுரத்தில் வசித்து வரும் அவரின் தந்தையார் வே.அன்ரனி,தாயார் அ.அன்னம்மா, சகோதரன் அ.புஸ்பராசா,தம்பியாரின் மனைவி பு.சுமதி ஆகியோரை தொலைபேசி இல: 4162876308 உடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டியுள்ளார். (சோ)

## இடைநிறுத்தம்

அரசசேவைப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பணம் மத்திய கல்லூரியில் நடாத்தப்பட்டு வரும் இலங்கை நிர்வாக சேவை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் யாவும் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் * காரணமாக தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.என்றும் வகுப்புக்கள் சம்பந்தமான மேலதிக விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும் என சங்க செயலாளர் தெரிவித்துள்ளார். (33)

## உதவிப்பொருட்கள் கையளிப்பு!

26 ஆம் திகதி நடைபெற்ற கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருட்களான பாய், படுக்கை விரிப்புகள், உடைகள்,அரிசி, தேங்காய்,பிஸ்கட், பால்புட்டி, ,கரண்டிகள்,அவல்,சீனி, சர்க்கரை,தறப்பாள்,பால்மாப் பெட்டிகள் முதலானபொருட்களைக்கையளித்தனர். பல்லவராயன்கட்டு, ஜெயபுரம் வடக்கு. ஜெயபுரம் தெற்கு, கரியாலை நாகபடுவான் கிராமமக்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பங்காளி நிறுவனங்களான கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனம்,பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனமூடாக கிராம அலுவர்களின் மேற்பார்வையுடன் நேற்று புதன்கிழமையன்று கிளி. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நடுவப்பணியகத்தில் கையளித்துள்ளனர்.

# நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் ஐவருக்கு வயிற்ரோட்ட நோய்

(அலுவலக செய்தியாளர்)

வடமராட்சிக் கிழக்கில் கடற்பெருக்கால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களில்ஐவர்வயிற்ரோட்டத்துக்கும்,ஒருவர்அம்மை நோய்த் தாக்கத்திற்கும் உள்ளாகியுள்ளனர் என கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி பாஸ்கரன் பளையில் வைத்துத் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் கடற்பெருக்கால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கும் பல்லாயிரக்கணக்கானவர்களில் இதுவரை 5 பேருக்கு வயிற்ரோட்டம் ஏற்பட்டுள்ளது. இதில் ஒரு குழந்தைப் பிள்ளை மேலதிக சிகிச்சைக்காக கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். ஏனையவர்கள் மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டும் உள்ளனர். இதே வேளை ஒருவர் அம்மை நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளார். இவரும் மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மக்களின் தொகைக்கு ஏற்ப மலசல கூடங்கள் இல்லாதநிலை ஆபத்தானது.தற்போது தற்காலிக மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வந்தாலும் அவை போதாத நிலையே காணப்படுகிறது. 30 மக்களுக்கு ஒரு மலசலகூடம் என்ற அடிப்படையே நிச்சயம் தேவை. இதுவே சிலவேளை பெரும் ஆபத்தில் மக்களைக் கொண்டு போய்விடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

# பாக். அணியை 9 விக்கெட்டுக்களால் இலகுவாகத் தோற்கடித்த அவுஸ்.!



(மெல்பேர்ன்)

மெல்பேர்னில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலிய அணியிடம் தோல்வி கண்டது. நேற்று முன்தினம் ஆட்டமுடிவில் 5 விக்கெட் இழப்புக்கு85ஓட்டங்களை தனது இரண்டாவது இனிங்சில் பெற்றிருந்த பாகிஸ்தான் அணி ஆட்டத்தின் நான்காவது நாளான நேற்று 163 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் ஏற்கனவே முதல் இனிங்சில் 38 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்த அவுஸ்திரேலிய அணிக்கு (பாகிஸ்தான் 341 ஓட்டங்கள்,அவுஸ்திரேலியா 379 ஓட்டங்கள்) 125 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதனை 27,5 ஓவர் களில் ஒரு விக்கெட் இழப்புக்கு எட்டியது அவுஸ்திரேலியா அணி, ஹைடன் 56 ஓட்டங்களையும், அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் 62ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர்.

இந்த 7 விக்கெட் வெற்றி மூலம் 2-0 என்ற நிலையில் அவுஸ்திரேலிய அணி தொடரை வென்றது. மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட்போட்டி எதிர் வரும் 2ஆம் திகதி சிட்னியில் தொடங்கியுள்ளது.

பேர்த்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட்டிலும் 491 ஓட்ட வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அணி வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.


# கடற்கொந்தளிப்பிலிருந்து அதிர்ஷ்ட வசமாகத் தப்பிய முரளி

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட கடல் அனர்த்தத்தின்போது இலங்கை யின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார். இதனைத் தொடர்ந்து கிரிக்கெட் ஓடும் மனநிலையில் தான் இல்லை எனத் குறிப்பிட்டுள்ளார். முரளிதரன்.

இது தொடர்பாக அவுஸ்திரேலிய பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சம்பவ தினம் தான் காலியில் இருந்ததாகவும், அங்கிருந்து தான் புறப்பட்ட 20 நிமிடங்கள் கழித்து கடற்கொந்தளிப்பு ஏற்பட்டதாகவும், 20 அடி உயரத்திற்கு கடல்கொந்தளிப்பு ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது அணியின் முகாமையாளரின் வீடும் காணாமற் போய்விட்டதாகவும், தங்களது வீரர்களின் குடும்பம் அங்கிருந்தாகவும், அவர்களின் கதி பற்றித் தெரியவில்லையெனவும் முரளி மேலும் குறிப்பிட்டுள்ளார்.



## சிந்தனைக்கு

சமூக நீதியும் சனநாயக சுதந்திரங்களும் தழைத்தோங்கும் ஓர் உன்னத சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே எமது அரசியல் இலட்சியமாகும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 30-12-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com


## அடுத்த கட்டமாக....!

பேரனர்த்தம் நடந்து நான்கு நாட்கள் கடந்து விட்டன. ஒரு புறத்தில் இறந்து போனவர்களின் சடலங்களைத் தேடும் நடவடிக்கைகளும் அவற்றை அடக்கம் செய்யும் பணிகளும் நடந்து கொண்டிருக்கையில், மற்றொரு புறத்தில் இக்கோர அழிவுகளில் சிக்கி உயிர் தப்பியவர்களைப் பராமரிப்பதற்கான பணிகளும் மிக முனைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டியவையாகவுள்ளன.

பல ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே வேளைகளில் இடம்பெயர்ந்ததினாலும், அவர்கள் ஏதுமற்றவர்களாக, இருப்பதும் அத்தோடு உடனடியாகத் தமது நிலங்களுக்குத் திரும்ப முடியாத நிலையிலும உள்ளமையால் அவர்களை நலன்புரி நிலையங்களில் தவிர்க்க முடியாது தங்க வைக்கப்பட வேண்டிய நிலையே உள்ளது.

அத்தோடு பேரலையால் ஏற்பட்ட பெரும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருமே இன்று நிர்க்கதியாகவே உள்ளனர். இவர்களில் எவருமே சுயமாக இன்று தமது வாழ்வியலை மேற்கொள்ளத்தக்க நிலையில் இல்லை. அவர்கள் அனைவருமே பராமரிக்கப்பட வேண்டியவர்களாகவும், தங்கி இருப்பவர்களாகவுமே உள்ளனர்.

இவர்களுக்குத் தற்பொழுது தேவையான உணவுகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், மக்களும் வழங்குகின்ற அதே வேளை ஒரு சில உதவிகளை அரச சார்பற்ற நிறுவனங்களும் வழங்கி வருகின்றன. அவ்வாறு இருப்பினும் சில அடிப்படைப் பிரச்சினைகளும் தவிர்க்கப்பட முடியாதனவாகவே உள்ளன.

ஒரு புறத்தில், பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒரே தடவையில் இடம்பெயர்ந்தமையினால் இவர்கள் பொது இடங்களில் குறிப்பாகப் பாடசாலைகளிலேயே தங்க வைக்கப்படுகின்றனர். ஆனால் வடக்கு- கிழக்கிலுள்ள பாடசாலைகள் அதிலும், குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் நீர் மற்றும் மலசலகூடங்கள் போன்றவற்றிற்கான அடிப்படை வசதிகள் மிக மிகக் குறைவானதாகும்.

இந் நிலையில் இப் பாடசாலைகளில் பல நூற்றுக்கணக்கிலோ அன்றி ஆயிரக்கணக்கிலோ மக்கள் தங்க வைக்கப்படுகையில் மேற்கூறப்பட்ட தேவைகளை நிறைவு செய்வது என்பது கடினமானதாகும். ஆகையினால் இந் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோர் செறிவைக் குறைத்தல் என்பது அதாவது அவர்களைத் தங்க வைக்க வேறு இடங்களையும் தேடுதல் என்பது அவசியமானதாகும்.

அவ்வாறு இல்லாது விடில் தொற்றுநோய் போன்றவை தீவிரமாகப் பரவுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். ஆகையினால நிவாரணப்பணிகளில் அடுத்த கட்டமானதாக நலன்புரி நிலையங்களில் மக்களின் செறிவைக் குறைத்தல் மிக அவசியமானதாகும். இதற்கான பணி தொடங்கப்பட்டிருப்பினும் அவை விரைவுபடுத்தல் தீவிரப்படுத்தப்படுதல் வேண்டும்.

ஆனால் இப்பணி விரைவுபடுத்தப்பட வேண்டுமானால் மக்கள் வாழக்கூடியதான கூடாரங்கள் பெருமளவில் தேவைப்படுபவையாகும். அத்தோடு படுக்கைகளும், போர்வைகளும் அத்தியாவசியமானவையாகும். ஆகையினால் தற்பொழுது தேவைப்படும் பொருட்களில் இவை மிகமிக முக்கியத்துவமானவையாகின்றன.

இதேவேளை மக்கள் ஓரளவேனும் வாழக்கூடியதான கூடாரங்கள் அமைப்பதற்கான தறப்பாள் போன்றவற்றை தமிழர் தாயகப் பகுதியில் கொள்வனவு செய்தல் என்பது சாத்தியமானதல்ல. ஆகையினால் இத் தேவைகளை நிறைவு செய்வதில் அரச சார்பற்ற நிறுவனங்களே பெரும் பங்கேற்க முடியும்.

ஆகையினால் இவ் விடயத்தில் அவை அதிக அக்கறை காட்டுதல வேண்டும். கூடாரங்கள், போர்வைகள் போன்றவற்றைப் பல நாடுகள் சிறிலங்கா அரசிற்கு வழங்கியுள்ளபோதும் அரசாங்கத்திடம் இருந்து தமிழ் மக்களின் கைகளுக்கு அவை வந்தடையுமா? என்பது சந்தேகமே!

அது மட்டுமல்லாது இன்று வீதிகளில் இடம்பெறும் சில சம்பவங்களானது, பேரினவாத சக்திகள் தமிழ் மக்களுக்கான துயர் துடைப்புப் பணிகளுக்கு முட்டுக்கட்டை போடுவனவாக உள்ளன. எடுத்துக்காட்டாக.....ஹபரணைச் சந்தியில் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு தமிழர் பகுதிகளுக்குச் செல்லும் நிவாரணப் பொருட்களையும் பறித்தெடுப்பதைக் குறிப்பிட முடியும்.

ஆகையினால் தமிழ் மக்களுக்கு அடுத்த கட்டத்தில் தேவைப்படும் கூடாரம் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளும் வசதியும், அவற்றைக் கொண்டு வந்து சேர்க்கும். வசதியும் கொண்டவையாக அரச சார்பற்ற நிறுவனங்களே உள்ளன. ஆகையினால் அடுத்த கட்டப் பணியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு பெரிதும் எதிர்பார்க்கத்தக்கதொன்று எனின் மிகையாகாது.

# தமிழர்புனர்வாழ்வுக் கழகம் ஊடாக வெளிநாட்டிலுள்ளோர் உதவிகள் வழங்குக!

### அரசியல் துறைப் பொறுப்பாளர் கோரிக்கை

வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தமது உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக வழங்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுபபாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சகல வளங்களையும் பயன்படுத்தி மக்களை மீட்டு பாதுகாக்குமாறு தலைவர் சகல துறை சார்ந்த தளபதிகளுக்கும், பொறுப்பாளர்களுக்கும், போராளிகளுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார் என மேலும் தெரிவித்த தமிழ்ச்செல்வன் அவர்கள், பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கான உதவிகளை உடனுக்குடன் செய்ய தாயகத்தில் உள்ள எமது உறவுகளும், புலம் பெயர்ந்து நாடுகளில் வாழும் உறவுகளும் வழங்கிவரும் ஒத்தாசைகள் பெரும் உதவியாக அமைந்துள்ளன எனவும், வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தமது உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக வழங்குமாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சடலங்களை விரைவாக ஒப்படைக்க மரணவிசாரணை அதிகாரிகளுக்குப் பணிப்பு

கடற்புவி நடுக்கம் காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்களை உரியவர்களின் மூலம் அடையாளம் கண்டு, பெயர், வயது, முகவரி, அடையாளம் காட்டியவரின் பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொண்டு உடனடியாக உறவினர்கள் அல்லது உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு இந்த மாவட்டங்களின் நீதி நியாயாதிக்கத்திற்குப் பொறுப்பான வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார். வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் ஊடாக இந்த உத்தரவு அவ்வப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகர்ரிகளுக்கு வழங்கப்படுவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

கடற்புவி நடுக்கம் காரணமாக பெருமளவிலானவர்கள் உயிரிழந்துள்ளார்கள். அவர்கள் கடல் கொந்தளித்து நிலப்பகுதிக்குள் ஊடுருவியதனால், நீரில் அடித்துச் செல்லப்பட்டு மூச்சுத்திணறி மரணமடைந்துள்ளார்கள். இந்த மரணங்கள் இயற்கை அனர்த்தம் காரணமாகவே ஏற்பட்டுள்ளது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிந்தவிடயம். ஆகவே இவ்வாறு உயிரிழந்தவர்களின் சடலங்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி, வாக்குமூலங்களைப்பதிந்து, இயற்கை அனர்த்தம் காரணமாக சோகத்தில் மூழ்கியுள்ள பொது மக்களின் சோகத்தை அதிகரிக்காமல் தாமதமின்றி சடலங்களை உரியவர்களிடம் கையளிக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் வவுனியா மாவட்ட நீதிபதி தெரிவித்துள்ளார்.

# வெளி நாட்டு மீட்புக் குழுவினர் கொழும்பு வந்தனர்

(கொழும்ப)

கடற்கொந்தளிப்பால் பாதிப்புக்குள்ளான வடக்கு கிழக்கு மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவதற்காக வெளி நாட்டு மீட்புக் குழுவினர் இலங்கைக்கு வந்துள்ளனர்.

நேற்று இலங்கைக்கு வந்த இவர்களில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவர்கள் தொற்று நோய்களைத் தடுப்பதற்கான மருந்துப் பொருட்களைக் கொண்டுவந்துள்ளனர். ஸ்பெயின் நாட்டவர்களும் இப்பணிக்காக வந்துள்ளனர்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் யுனிசெவ் நிறுவனத்தின் நிவாரணப பொருட்களுடன் பெல்ஜிய நாட்டு விமானம் நேற்று இலங்கையை வந்தடைந்தது.

# பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் சந்திரிகாவிடம் அனுதாபம் தெரிவிப்பு!

பிரான்ஸின் வெளியுறவுத்துறை அமைச்சர் மிச்செல் பார்ணியர் சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துள்ளார். இதன் போது இலங்கையில் ஏற்பட்ட கடற்பெருக்கத்தால ஏற்பட்ட இழப்புக் குறித்து தமது நாட்டின் அனுதாபத்தை அவர் தெரிவித்துக்கொண்டார். ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில். விசேட பயிற்சி பெற்ற ஒருவரை இலங்கைக்கு அனுப்பி ஆய்வுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை தாம் நாடு திரும்பியவுடன் மேற்கொள்ளவுள்ளதாக பார்ணியர் தெரிவித்தார்.அத்துடன் இலங்கைக்கு உதவவென முன் கூட்டிய எச்சரிக்கை அமைப்பைத் தமது நாடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் சனாதிபதியிடம் உறுதியளித்தார் இதற்குப் பதிலளித்த சனாதிபதி இது தொடர்பில் தாம் பிராந்திய நாடுகளுடன் கலந்துரையாடி ஒரு பொது மையம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிப்பதாக தெரிவித்துள்ளார் இதேவேளை 100 பேரைக்கொண்ட மீட்புப் பணியாளர்களை பிரான்ஸ் நாடு இலங்கைக்கு அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. சபையும், இந்தியாவும் உதவியளிப்பதாக உறுதி!

(கொழும்பு).

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு சாத்தியமான அனைத்து வழிகளிலும் உதவப்போவதாக இந்தியாவும்,ஐ.நாடுகள் சபையும் உறுதியளித்துள்ளன.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், ஐ.நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் ஆகியோர் நேற்று முன்தினம் சனாதிபதி சந்திரிகாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உறுதியளித்துள்ளனர் ஆரம்பக்கட்ட உதவித்தொகையாக 260 கோடி ரூபாவை நன்கொடையாக வழங்குவதென இந்திய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

## மீட்புப்பணிக்கு 5000 அமெ. படையினர்

(கொழும்பு)

இலங்கைத் தீவை கடற்புவி நடுக்க மீட்புப் பணிகளுக்கு உதவுவதற்காக அமெரிக்காவிலிருந்து ஐயாயிரம் கடற்படை வீரர்கள் வருகைதர உள்ளனர். கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவராலயம் நேற்று இத்தகவலை அறிவித்துள்ளது

### சிங்கள ஆயுதப்படைத் தரப்பினரால்

# நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்வதில் இடையூறு

கடல் கோளினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கிற்கு பொருட்களை எடுத்துச் செல்லும் போது பல நிர்வாக மற்றும் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவதாகவும், சிலபகுதிகளில் நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்ல பாதுகாப்புத் தரப்பில் இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்தத் தகவல் குறித்து பாதுகாப்புத் தரப்பினர் மறுப்புத் தெரிவித்துள்ளதுடன், வழமையான நடவடிக்கைகளே பின்பற்றப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்லும் போது நிறுவனங்கள் மற்றும் தனியாட்கள்சமூக சேவகர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறு சம்பந்தப் பட்டவர்கள் வேண்டப்பட்டுள்ளனர். (32)

# கடற் பூகம்பப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அவசர வேண்டுகோள்

## தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் விடுப்பு

(கிளிநொச்சி)

கடற் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கும்பொருட்டு புலம் பெயர்ந்து வாழும் மக்கள் தாராள உதவிகளை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ள தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம், உதவுவோர் வைப்புச் செய்ய வேண்டிய வங்கிக் கணக்கு இலக்கங்களையும் அறிவிப்புச் செய்துள்ளது.

இது தொடர்பாக இவ்வமைப்பு விடுத்துள்ள அறிவிப்பில்.

வரலாறு காணாத கடற் பூகம்பம் உயிரழிவையும், சொத்திழப்பையும் ஏற்படுத்தியுள்ளது. வாழ்விடங்களை இழந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எமது நிறுவனம் நிவாரணப் பணிகளை மேற்கொள்கின்றது.பளை மத்திய கல்லூரி, புலோப்பளை றோமன் கத்தோலிக் கப்பாடசாலை,பளை சோரன்பற்று கணேசா வித்தியாலயம், கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை, கட்டைக்காடு,வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் தங்கியிருப்போருக்கு எமது நிறுவனம் உதவுகின்றது.

26 ஆம் நாள் மாலை விசுவமடுவில் வைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது நிறுவனம் ஒருதொகுதி துணிமணிகள். பாய்கள், உடுபுடவைகளை வழங்கியுள்ளது. 27 ஆம் நாள் பளை மத்திய கல்லூரி,புலோப்பளை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை பளை சோரன்பற்று கணேசா வித்தியாலயம்.கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றில் தங்கியிருப்போருக்கு எமது நிறுவனம் உடுபுடவைகள்,விரிப்புகள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள், அத்தியாவசியப் பாவனைப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கியது. 28 ஆம் நாள் இடம்பெயராது பல இன்னல்களுக்கு மத்தியில் அழிந்த தமது வாழ்விடங்களில் வாழும் கட்டைக்காடு.வெற்றிலைக்கேணி மக்களுக்கு எமது நிறுவனம் உணவுப் பொருட்களை வழங் கியது.

யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு எமது நிறுவனம் நேரடி உதவிகளை வழங்குகின்றது. புலோலி அமெரிக்கன் மிசன் பாடசாலையில் தங்கியிருப்போர்களுக்கு, குறிப்பாகக் குழந்தைகளுக்கு பால்மா,மற்றும் உணவுப் பொருள்களை 28 ஆம் நாள் எமது நிறுவனம் வழங்கியுள்ளது. மணற்காட்டில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் தங்கியிருக்கும் மக்களின் உடமைகளை வாகனத்தில் ஏற்றிச் சென்று ஒப்படைத்துள்ளோம்.

புலம் பெயர்ந்த தமிழுறவுகளின் தாராள நிதி உதவிகளை ஆதாரமாகக் கொண்டு எமது நிறுவனம் மேற்கூறிய பணிகளைச் செய்துவருகின்றது. வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலும் எமது நிறுவனம் இவ்வாறான பணிகளைச் செய்வதற்கு ஒழுங்குகளை மேற்கொள்கின்றது.

புலம்பெயர்ந்து வாழும் மக்கள் தாராள நிதியுதவி செய்வதற்கு கீழ் வரும் வங்கி இலக்கங்களைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.கிளிநொச்சி இலங்கை வங்கி இல:-4538-கிளிநொச்சி, மக்கள் வங்கி இல:-2945 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முல்லையில்...

அண்மையில் உள்ள நீர் ஏரிகளுக்குள்ளும் வயல் வெளிகளிலுமே அதிகளவானவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஏனைய கடற்கரை ஓரத்தில் மிதந்து வருவதும் கட்டட இடிபாடுகளுக்கு மத்தியில் இருந்தும் மீட்கப்பட்டுள்ளன. (குச)

### உயிரிழந்தோர்...

சேகரிப்பு பிரிவினால் இது தொடர்பாக இது வரை வெளியான தகவலின்படி 21 ஆயிரத்து 715 பேர் உயிரிழந்துள்ளதாக உத்தியோக பூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் ஏற்பட்டுள்ள இழப்புக்கள் பற்றிய விபரம் இதில் உள்ளடக்கப்படவில்லை. 4023 பேர் காணாமற் போயுள்ளார்கள் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 815 குடும்பங்களைச் சேர்ந்த 7 இலட்சத்து 45 ஆயிரத்து 800 பேர் 505 முகாம்களிலும், தனியார் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்தத் தகவலிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசம் உள்ளடக்கப்படவில்லை. மாவட்ட ரீதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள உயிரிழப்புக்கள் பற்றிய விபரங்கள் அம்பாறை - 8,303 அம்பாந்தோட்டை - 4,500 காலி-2,398 யாழ்ப்பாணம் - 2,076 மட்டக்களப்பு - 1,685 மாத்தறை - 705,திருகோணமலை - 814,வவுனியா - 140 கொழும்பு - 34,களுத்துறை - 147,இதேவேளை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றிரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய தொலைக்காட்சி உரையில் எதிர் வரும் 31ஆம் திகதியை தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### அம்பாறையில்....

கொழும்பில் இருந்து அலபமாக அறுகக் கூடிய மேற்கு தெற்கு கடற்கரைச் சேதங்களும், இழப்புகளும் வெளிக்கொணரப்பட்டன.

சிறிலங்காவின் தென்கிழக்குக் கரையோரத்தில் நீலாவணை தொடக்கம் உகந்தை வரையான பிரதேசத்தில் முஸ்லிம், தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற கிராமங்களாகும்.சனந்தொகை கூடிய 'பெரிய' வர்த்தகப் பட்டினங்களான கல்முனை, அக்கரைப்பற்று 'பொத்துவில் அதன் சுற்றுப் புறங்கள் 70 இன் பிற் பகுதியில் இருந்து கடமிற்கு அண்மையாகத் தள்ளப்பட்டுள்ளது. இந்த சுனாமி அலைகள் நேரடியாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்கியதால் இறப்புகளும், அழிவுகளும் பேரிழப்பாக அமைந்துள்ளன. பாண்டிருப்பு, காரைதீவு, திருக்கோவில் தம்புவில் கோமாரி ஊறணி ஆகியவை அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரதான தமிழ்க் கடற்கரைக் கிராமங்கள் ஆகும். சகல தமிழ் முஸ்லிம் கிராமங்களும், நகரங்களும் கடலிற்கும் கடல் நீரேரிக்கும் இடையில் உள்ளன மீட்புப் பணி நடவடிக்கையின் தாமதம் பற்றாக்குறை ஆகிய காரணங்களினாலேயே இறப்புக்கள் அதிகரித்துள்ளன. என அம்பாறை மாவட்ட தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.கூடுதலான தமிழ்கிராமங்களான உமிரி,சங்கமான்கண்டி, கோமாரி, ஊறணி போன்ற கிராமங்கள் வெளித் தொடர்புகளின்றி பல நாட்கள் தனியாகப் பிரிந்திருந்தன. இங்கு அழிவுகளும், இறப்புக்களும் சிறிதளவே தெரியவிருப்பதால் உதவிகள் தாமதமாகவே வந்துள்ளன. அம்பாறை மாவட்டத்தில் கிட்டத்தட்ட காணாமற்போன 3300 பேர் இறந்துள்ளார்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

ஜி.ரி.சற் நிறுவனத்தினால் பயிற்றப்பட்ட சகல உளவளதுணையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள அழகியற் கலாமன்றத்தில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் GTZ BECARE திட்டப் பிரிவினரும் கலந்துகொள்வர் தவறாது பங்குபற்றும் வண்ணம் ஜி.ரி.சற். வவுனியா தொழில்நுட்ப ஆலோசகர் கேட்டுள்ளார்.

### தொற்றுநோய்....

பாதிப்புக்குள்ளான பகுதிகளில் உள்ள எந்தப் பொருட்களையும் எடுக்கவேண்டாம். பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்துப் பொருட்களும் கிருமித் தொற்றுக்குள்ளாகி இருக்கிறது எனவே இதன்மூலம் தொற்று நோய்கள் இலகுவில் பரவி விட வாய்ப்புக்கள் உள்ளது. அத்துடன் மக்கள் இப்போது முகாம்களில் மிகவும் நெருக்கமாக உள்ளனர். இதுவும் தொற்றுநோய் ஏற்படுவதற்கு இலகுவாக அமைந்துவிடும் எனவே இதனை நீக்குவதற்கு மக்களின் நெருசலைக்குறைப் பதற்குத் தீர்மானித்திருக்கிறோம் கடல் நீரில் சிக்குண்டு தப்பியவர்கள் காயமடைந்தவர்கள் அனைவரும் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்பட உள்ளனர். கடற்பெருக்கில் சிக்கிக் காயமடைந்தவர்கள் வைத்திய ஆலோசனைகளைப் பெற்று அதற்கமைவாக செயற்படுதல் வேண்டும் இதனுடன் மக்கள் சுகாதார நடைமுறைகளை சீராக கைக்கொள்ள வேண்டும் தவறின் தொற்று நோய்த்தாக்கத்திற்குள்ளாக வேண்டிய நிலை ஏற்படலாம். தொற்றுநோய்க்குள்ளானவர்களை தனிமைப்படுத்தி வைத்திய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானித்து மருதங்கேணி வைத்தியசாலையை இதற்காக பயன்படுத்துவதற்கு தீர்மானித்து அங்கு சிலரை அனுமதித்து வைத்திய சிகிச்சைகளை மேற்கொண்டு வருகிறோம் எனவும் தெரிவித்தார். (லோ.நி)

### அவலத்தைப்...

நேற்று மாலை யாழ் செயலகத்தினில் இடம்பெற்ற அமைச்சர் டி.யு. குணசேகரா தலைமையில் உயர்மட்டக் குழுவினருடனான சந்திப்பின் போதே வல்வெட்டித்துறை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் பகிரங்கமாக இக்குற்றச்சாட்டை எழுப்பியுள்ளனர்.

இதேவேளை அமைச்சருடனான சந்திப்பின்போது கலந்து கொண்டிருந்த யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி சுனில் தென்னக்கோன். இப்பணிகளை தடுத்து நிறுத்த உடன் உத்தரவிடுவதாக அங்கு உறுதிமொழியினை வழங்கியுள்ளார்.

இதனிடையே கடற்கொந்தளிப்பின்போது காங்கேசன் துறைப்பகுதியினில் காணாமற் போயிருந்த கடற்படை வீரரொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். புத்தளம் பகுதியைச்சேர்ந்த சுகசில்வா எனும் 34 வயதுடைய கடற்படை சிப்பாயே நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். காங்கேசன் துறைப் பகுதிக்கு விஜயம் செய்த மல்லாகம் நீதவான் திருமதி சரோஜினி இளங்கோவன் மரண விசாரணையின் பின் சடலத்தை சொந்த இடத்திற்கு அனுப்பிவைக்க உத்தரவிட்டுள்ளார். (27)

# யாழ். படைத்தளங்களின் பாதிப்பை அமைச்சர் குணசேகரா பார்வையிட்டார்

யாழ். வடமராட்சியில் கடல் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள கரையோரப் பிரதேசங்களுக்கு நேற்றுப்பிற்பகல் (இரகசிய திடீர்)விஜயம் செய்த சிறிலங்காவின் அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டி.யு.குணசேகரா அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்பேணும் விடயங்களில் கவனம் செலுத்தாது அப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்களைக் கேட்டறிதல் உட்பட படைத்தரப்பின் நலன் பேணும் விடயங்களிலேயே ஈடுபட்டார்.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் உட்பட படையுயர் அதிகாரிகள் மற்றும் தன் பரிவாரங்கள் சகிதம் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்த இவர் பாதிக்கப்பட்ட மக்களையோ மக்கள் பிரதிநிதிகளையோ சந்தித்துப் பேசாது அவ்வப் பகுதிகளில் உள்ள கடற்படை முகாம் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசி படையினர்களுக்கு ஏற்பட்ட சேதவிபரங்களை மட்டுமே ஆராய்ந்தார்.

எனினும் அவர் கண்துடைப்பிற்காக சில அரச அதிகாரிகளையும் சந்தித்துப்பேசியதைக் காணக்கூடியதாக இருந்தது. (33)

### பாதிப்புற்ற...

சிதைந்து போன எமது தேசத்தையும், நலிந்து போன எமது மக்களையும் மிகவும் மோசமாகப் பாதித்துள்ளது. இந்த இயற்கையின் அழிவில் இரத்த உறவுகளையும், அன்புக்குரியவர்களையும் பறிகொடுத்து ஆற்ற முடியாத துயரத்திலும், வேதனையிலும் துடிக்கின்ற எமது மக்களுக்கு எனது அன்பையும், ஆறுதலையும் , ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அதுபோலவே, தமிழ்பேசும் தாயக மண்ணிலும், தென்னிலங்கைக் கடலோரப் பகுதிகளிலும் தமது உற்றார் உறவினரைப் பலி கொடுத்து ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் இஸ்லாமிய சிங்கள சகோதரர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக. அத்துடன் தென்னாசிய நாடுகளிலும் , இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் உயிரிழப்புகளைச் சந்தித்து துயருறும் மக்களின் சோகவுணர்விலும் பங்குகொண்டு எனது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றேன்.

இந்த நிலவதிர்வுப் பேரலைகள் எமது மண்ணில் நிகழ்த்திய பேரழிவில் பல்லாயிரக்கணக்கான எம்மக்களது உயிரைப் பலியெடுத்து பல ஆயிரம்பேரைக் காயப்படுத்தியதோடு மட்டும் நின்று விடவில்லை. பல கரையோரக் கிராமங்களையும் பல கரையோர நகரங்களையும் அடியோடு அழித்து, எம் மக்களின் கடல் சார்ந்த பொருளாதார வாழ்வை நாசப்படுத்தியிருக்கிறது. பல குடும்பங்களை மொத்தமாக அழித்து எம் மக்களது சமூக வாழ்வைச் சிதைத்திருக்கிறது. பல்லாயிரம் மக்களது வாழ்விடங்களை அழித்து அவர்களது எதிர்காலத்தை மோசமாகப் பாதித்திருக்கிறது.

இப்படியாகப் பேரழிவைச் சந்தித்து, பெரும் துயரத்தில் வாழும் எம் மக்களுக்கு எமது விடுதலை அமைப்பும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும், பல்வேறு மக்கள் அமைப்புக்களும் கூட்டாக இணைந்து உதவி நடவடிக்கைகளையும் மனிதாபிமானப் பணிகளையும் முழு அளவில் மேற் கொண்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகளுக்கு வலுவூட்டுகின்ற வகையில் பாதிப்புற்றுள்ள மக்களுக்கு நம்பிக்கையூட்டுகின்ற வகையிலும் தாமாகவே முன்வந்து, தாராளமாக உதவி வருகின்ற புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகளுக்கு இந்நேரத்தில் எனது அன்பையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எம் மக்களை இப்பேரழிவிலிருந்து மீட்கத் தொடர்ந்தும் உதவவேண்டும் எனவும் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். அத்தோடு, பாதிப்புற்றுள்ள எம் மக்களுக்குத் தாராளமாக உதவுமாறு உலக நாடுகளையும் ஐ.நாவின் அமைப்புக்களையும் வேண்டிக் கொள்கின்றேன்.

### வடமராட்சி...

கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தரைக்கு மேலாக உள்ள சடலங்கள் முற்றாகஅகற்றப்பட்டுள்ளன. எனினும் மணலில் புதையுண்டு போயுள்ள . கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கின்றன. கடலில் அடித்துச் செல்லப்பட்ட சடலங்கள் இப்போது மீட்புப்பணியாளர்களால்மீட்கப்பட்டு வருகிறது. (லோ)

குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபத்தினர் விடுக்கும்

அவசர வேண்டுகோள்

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குமரகுருவின் வாடிக்கையாளர்கள் எங்கு இருந்தாலும் உடன் தொடர்பு கொள்ளவும். அவர்களின் அவசர தேவையைப் பூர்த்தி செய்ய தயாராக இருப்பதால் நேரிலோ, தொலைத்தொடர்பு மூலமாகவோ, கடித மூலமாகவோ உடன் தொடர்பு கொண்டு உங்கள் உதவித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

குறிப்பு-வாடிக்கையாளர்கள் உறுதிப்படுத்தக்கூடியவாறு தொடர்பு கொள்ளவும்.

(சி.1099)

T. P.021-2285971

குமரகுரு புடவை வாணிபம்
யாழ். சாலை, கிளிநொச்சி.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது